T03940
R001J01



குருப்பியோநம :
பரப்ரம்மணேநம

திருபுராரகஸ்யம் ஞானகாண்டத்திலுள்ள
ஸத்ஸங்க மாஹாத்மியமென்னும்

# ஹேமலேகை சரித்திரம்

(என்ற வேதாந்த கீர்த்தனங்கள்.)

இஃது

ஸகல வேதாந்த ஸித்தாந்த வித்வத் சிரோமணியாகிய
ம்மஸ்ரீ அப்பயதீக்ஷிதர் அவர்களின் வம்சபரம்பரையைச்
சார்ந்த கோடகநல்லூர்
என். அப்பய்யாசாஸ்திரிகள் அவர்களின் புத்திரி
எ. எஸ். லெக்ஷ்மி அம்மாளால்
இயற்றப்பட்டது.

---

இஃது
ப்ரம்மஸ்ரீ என். ஸுப்ரமண்யசாஸ்திரிகளால்
பரிசோதிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு 1000.

---

Printed at Jaya & Co., Triplicane, Madras.

1938.

*yright Reserved*] இதன் விலை அணா 6

வேறுபேனைக, ஒன்று
காரவனை நெஞ்சே கூடனை
ாப்பு ஆக்க முயன்று.
ஆக்கினேனா. அப்பு
அவ்வா நீடிப்பிர்
ஒரு காரவனை விடுய
ஆசைகளிருக்கு.
ா வெளிய்து. உபாதை
பார்க்கும் போது
ஜாதியக்கவேணும்,
நான் கேட்டு. அவனை
யுஸ் கேட்டு உள்ளை
யும் கேட்கவாபோ?
அதுவா நானுமார்க்
கம் - அறிவு.

ஸ்ரீஸர்குருப்யோநம:

# முகவுரை.

திருபுராரகஸ்யமென்னும் இவ்வரிய நூலானது ஜெனன மரணமென்னும் ஸாகரத்தில் முழுகி கரை காணுமல்லிருக்கும் ஜீவர்களை உத்தாரணம் செய்யும்பொருட்டு ஹாரிதாயனரென்னும் மகரிஷியினுல் வடமொழியில் இயற்றப்பட்டுளது. பரமபக்திக்கேதுவாகிய மகாத்மிய கண்டம் ஞானகண்டம் சரியாகண்டம்மென்னும் மூன்றுகண்டங்கள் அடங்கியுளது. பக்திவைராக்கிய ஸாதனசதுஷ்டயஸம்பன்னர்களாகிய ஜிஞ்ஞாஸுவின் பொருட்டு, பரமகாருணீகரான, தெத்த குரு, ஜெமதக்னியின் புதல்வராகிய பார்கவர்கு உரைத்திருக்கின்றூர். இப்பரதகண்டத்தில்நம்போன்ற ஏழைகளின்பொருட்டு வி. ஆர். ஸுப்ரமண்ய ஐயரால் ஞானகண்டத்திர்க்கு மாத்திரம் ஸம்ஸ்கிரதத்தில்லிருந்து தமிழில்மொழிபேர்துளர், அப்பிரதியை கொண்டு அற்பமதியினுளாகிய நான் ஸத்ஸங்க மகாத்மிய மென்ற 10 அத்தியாயமுள்ள ஹேமசூடோ உபாக்யானத்தை சரித்திரமாக எழுததுணிந்தேன். இச்சரித்திரம் எழுதும் சக்தி நமக்கில்லைஎன்று எவ்வளவுசொல்லியும் மனதானதுகேழ்க்காமல் இதில் பிரவர்த்தித்து விட்டது ஆனுல் என் சக்தியினுல் எழுதிவிடுவோம் என்று நினைக்கவில்லை பெரியோர்களின் கிருபையினுலும் தாயாகிய திருபுரையின் அநுக்றகத்தினுலும் இச்சரித்திரத்தை பூர்த்திசெய்தேன் இதின் கண் அநேகம் பிழைகளிருக்கலாம். ஆனபோதிலும் (பாயவாரியுண்டுவர்கெடுத்து உலகெல்லாம் பருகத் தூயவாக்கியகார்ரென) சொர்ப்பொருள் தெளிந்த பெரியோர்கள் குற்றத்தை நீக்கி குணமாக கிரகிப்பார்ராக, நீரையும் பாலையும் கலந்துவைத்தால் ஹம்ஸபக்ஷியானது நீரை பிரித்து

பாலையுள்கொள்ளல்போல இதிலிருக்கும் தீஞ்சொல்லை நீத்து இன் சொல்லை கொள்வது பெரியோர்களின் ஸ்வபாவம் ஆத லால் இதனையும் ஏற்றுகொள்வார்களென்று வந்தனம்மளித்து கேட்டுகொள்கிறேன்.

---

## முக்கிய அறியிப்பு.

இன்னூலை இயற்றியகாரணமாகிய ஓர் ஆத்மாவுக்கு ஏதாவது ஓர் பலன் இருக்குமாயின் இன்னூலை படித்து அதின் தாத்பர்யத்தை நன்றாக உணர்ந்து பராசக்தியாகிய சாக்ஷாத்திருபுராதேவியின்ச் சரணாரவிந்தத்தின்கண் அசஞ் சல பக்திநிமித்தம் ஆத்ம லாபத்தைபெற்று இகலோகத்தில் விரும்ப கூடிய கோரிக்கைகளையடைந்து சுகத்தைபெருவது டன் பரலோகத்திலும் மறுபிரப்புக்கு யிடைனேரிடாமல் மோக்ஷஸாம்ருஜ்யத்தை அடைவதே பலன் என்று நினைக் குகிறேன்.

இங்கனம்—திருவனந்தபுரம்
என். ஸுப்ரமண்யசாஸ்திரிகள்.

---

## ஸமற்பணம்.

இன்னூலை எனது ஞானோபதேஷ்டாவாகிய பரமகுரு வும், என்பேரில் அபரிமிதமான அன்பு பாராட்டி அனுக்கிற கித்துவரும் என் பிதாவுமாகிய ஸ்ரீமான் அப்பயாசாஸ்திரிகளவர்களுடையவும் இன்னூலின் வாக்கியங்கள் என்மனதில் உதிக் கும்பொருட்டு அனுக்றகத்தை அருளிய குருவாகிய பத்மாஸ நியம்மாள் திருவடிகளிலும் மிகவும், வணக்கமாய் ஸமர்பிக் குகின்றேன்.

என்று எ. எஸ். லெக்ஷ்மியம்மாள்.

# அட்டவணை.


| லக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|
| 1 | வரமருள்வாய் | 1 |
| 2 | கிருபைசெய்வாய் | 2 |
| 3 | சங்கைதீராய் | 3 |
| 4 | சிருமதியாலிந்த | 6 |
| 5 | சிரத்தையுடன் | 7 |
| 6 | ராஜனரசாக்ஷி | 7 |
| 7 | வேட்டையாடவென்று | 8 |
| 8 | ஆச்றமத்தைநாடி | 9 |
| 9 | எந்தனுடசரித்திரம் | 11 |
| 10 | வ்யாக்றபாதரும் | 12 |
| 11 | பட்டணத்தைநாடி | 13 |
| 12 | ப்றம்மானந்த | 14 |
| 13 | அன்புடனே | 15 |
| 14 | கேளும்ருஜகுமார | 16 |
| 15 | இந்தவிதம்மாகராஜன் | 17 |
| 16 | நாதனேநீரும் | 18 |
| 17 | திருபுரையுட | 19 |
| 18 | மைந்தனும்பிறந்தானே | 20 |
| 19 | அரசாக்ஷிகேளீர் | 21 |
| 20 | இப்படிஐவர்களும் | 22 |
| 21 | அஸ்திரனென்னும்பேர்கொண்ட | 23 |
| 22 | கேளும்என்நாதா | 25 |
| 23 | புத்தியும்மயக்கம்கொண்டாளே | 26 |
| 24 | தேசத்வாரபட்டணத்தை | 27 |
| 25 | துஷ்டைஅவித்தையுடன் | 28 |
| 26 | அன்னைசித்ரூபியின் | 29 |

| லக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|
| 27 | ப்ரித்யனும்புறப்பட்டானே ... ... | 30 |
| 28 | அவ்வூர்பாழாகிவிட்டால் ... ... | 31 |
| 29 | என்னசொல்லுவேன் ... ... | 32 |
| 30 | அரசனேவரிசயாய் ... ... | 33 |
| 31 | என்னகதைசொன்னாய் ... ... | 34 |
| 32 | அன்புடன்கேளும் ... ... | 35 |
| 33 | அன்பிற்குகந்தஎன் ... ... | 36 |
| 34 | மன்னனுரைத்தமொழியை ... ... | 37 |
| 35 | சொல்லுறேன்கேளும்மன்னா ... | 39 |
| 36 | பூஜைசெய்தானேராஜன் ... ... | 41 |
| 37 | மன்னன்வரவுதன்னை ... ... | 42 |
| 38 | மன்னனேசொல்லுறேன்கேளும் ... | 43 |
| 39 | அன்பேநீதன்மையாய்இருக்கின்றாய் ... | 44 |
| 40 | அரசனேநான்உரைக்கும்மொழியை ... | 45 |
| 41 | ஏகாந்தமாயிருந்து ... ... | 47 |
| 42 | சுக்லச்ரோணிதம்நிரைந்த ... ... | 48 |
| 43 | இப்படியாகஇரைவன் ... ... | 50 |
| 44 | தையலேஉன்மொழியைகேட்டு ... | 51 |
| 45 | சித்தநிரோதனம்செய்துநீர் ... ... | 52 |
| | நாதனேநீர்இன்னமும் ... ... | 54 |
| 46 | இன்னமும்சொல்லுறேன் ... ... | 55 |
| 47 | மன்னனும்பரநிலையில் ... ... | 57 |
| 48 | மன்னனேமிகவும்நன்றே ... ... | 59 |
| 49 | அரசனேநீர்இப்போ ... ... | 60 |
| 50 | ஆனந்தமாகநிரைந்தார் ... ... | 64 |
| 51 | திருபுரசுந்தரிக்குஜெயமங்களம் ... | 67 |

உ



## குரு ஸ்துதி.

ஸ்ரீகாந்த துருகிணை மன்யுதபன
ஸ்கந்தேந்திர நந்தியாதய :
ப்ருசீனா குரவோபி யஸ்யகருணா
லேசாத்கதாகௌரவம்,
தம்ஸர்வாதிகுரும் மனோஞ்ஞவபுஷம்
மந்தஸ்மிதாலங்கிருதம்
சின்முத்ருங்கித முத்ரபாணிநளிநம்
சித்தேசிவம் குர்மகே.



## கணபதி ஸ்துதி.

காருண்ய மதநிஷ்யந்த
கைவல்ய பதசாரிணம்
காளம்புத ச்யாமளாங்கம்
களபாநந மாச்ரயே.



## தேவி ஸ்துதி.

தேவீம் கதம்பவநகா மருணத்ரிகோணஸம்ஸ்தாம்
ஸிதாம் ஸித வரும்புஜ கர்ணிகஸ்தாம்
ஸத்புஸ்தகாக்ஷ வலயாங்கித பாணிபத்மாம்
வாகீசுவரீம் குலகுஹம் பிரணமாமிபக்தயா.

ஸ்ரீ குருப்பியோ நம:

பரப்பிர்ம்மணே நம:

திருபுராரகஸ்யம் ஞானகண்டத்திலுள்ள

ஸத்ஸங்க மஹாத்மியமென்னும்

# ஹேமலேகை சரித்திரம்.

விருத்தம்.

கெங்கையை சிகையில்கொண்ட சங்கரன் ஈன்றேடுத்த
ஐங்கராஉந்தன்பாதம் அன்புடன் பணிந்துகொண்டேன்
பொங்கவே இச்சரித்ரம் இப்புவிதனிலுரைக்க
மங்களமாக எந்தன் பங்கினில் வந்தருள்வாய்.

---

ராகம்—ஜயந்தஸ்ரீ. (1) தாளம்—ஆதி.

மருக்கேலரா—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வரமருள்வாய் வல்லபிநாதா வரமருள்வாய்

அனுபல்லவி.

தரமீது என்னை தர்கார்ப்பாய் சீராய்
குறைவராமல் இக்கவிதைக்கு நேராய். (வ)

சரணங்கள்.

மூலாதாரவாஸா மூஷிகவாஹன
ஆலகாலம்உண்ட நீலகண்டன்பால
வேலவனுக்குமூத்தவனான சீலா—உன்
பாலனைபோலென்னை பாராய் கோலாகல. (வ)

பாசக்கொடிதன்னை பறித்து எறிந்து
நேசமான உன்தாஸன்னென்று தெரிந்து
ஆசையாய் ஆனந்தமழையைசொரிந்து
பேச, ரண்டற்ற பிர்ம்மவாசல் திறந்து. (வ)

நித்யநிர்மலநிர்க்குணஸொரூபமே
பத்மாஸனியாய் பாரில்வந்தபாக்யமே
எத்திசையும் விளங்கிடும் ரெத்தினமே
சித்தத்தில் விளங்கும் சின்மயானந்தமே. (வா)

---

ஸுப்பிரமண்ணிய ஸ்துதி.

விருத்தம்.

விண்ணவர்மலர்கள் தூவி எண்டிசையிலும் கொண்டாடும்
ஷண்முககுகனே, உந்தன் தாளடிதன்னில், பணிந்தேன்
பண்புடன் ஹேலேகை சரித்திரம் உரைக்க இப்போ
பெண்மதியால் நினைந்தேன் ஸ்கந்தனே காப்பதாமே.

---

ராகம்—கெவுரிமனோகரி. **(2)** ஆதிதாளம்.

ப்ரோவஸாமயா—என்றமெட்டு.

பல்லவி.

கிருபைசெய்குவாய் கருணாகரனே கிருபைசெய்குவாய்.

அனுபல்லவி.

தருணமிதென்னை தர்க்கார்க்கவாராய்
சரவணபவ ஷண்முக, சீராய். (கி)

சரணங்கள்.

புள்ளிமயிலேறும் வள்ளிநாயகனே
தெள்ளியமாவுண்ட தீனதயாபரனே
அள்ளியானந்தரெஸம் அளிப்பவனே
கள்ளியவித்தையை துள்ளிடச் செய்வோனே. (கி)

உன்னையே நம்பினேன் ஓங்காரசொரூபா
என்னையாதரிப்பதுன்பாரமல்லவா
அன்பர்கள்போற்றிடும் ஆனந்தவடிவா
சின்மயானந்தம் அளிப்பாய் சித்ரூபா. (கி)

பத்மாஸனியாள் பாதத்தில் பணியவும்
சித்தபிரமை எல்லாம் சிதறிஓடவும்
எத்திசையும் நிறைவாக விளங்கவும்
சித்துவெளியில் ஸுகமாய், வஸிக்கவும். (கி)

---

## ஸரஸ்வதி ஸ்துதி.

### விருத்தம்.

வேதாவின்தேவியான நாதாந்தரூபி எங்கும்
பேதமற்றே இருக்கும் பேரின்ப வாரிதியே
போதப்ரகாசமாக புவனமெங்கிலும் விளங்கும்
பேதையாள்எந்தன்வாக்கில்எப்போதும், வந்திருப்பாய், வாணி

---

ராகம்—பிலகரி. **(3)** ஆதிதாளம்.

கனுகொண்டிரு—என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

சங்கைதீராய் பங்கயன்தேவி சங்கைதீராய்

### அனுபல்லவி.

ச்ருங்கைமேவிய சங்கரன் பீடமான.
திவ்யமங்கள சிருங்காரஸொரூபி. (ச)

### சரணங்கள்.

அலகிலானந்தம் அன்பர்கள் உள்ளத்துட்டி
உலகப்ரமைகள் ஒன்றும் இல்லாமல் ஓட்டி
பலகலையின் பொருள்களை ஒன்றுகூட்டி
துலங்கவே இந்தக்கவியை பாராட்டி (ச)

பத்மாஸனியாக பார்தன்னிலே மேவி
சித்தமதினில் சிறப்புடனே தாவி
அத்வைதவெளியில் அன்புடனே கூவி
சித்தபிரமைதீர்த்தாய் எந்தனுக்குதவி. (௫)

---

## பிரம்ம ஸ்துதி.

### விருத்தம்.

உந்திக்கமலம்தன்னில் உன்னிதமாய் இருந்து
விந்தையாய் ஈரேழுஉலகமெல்லாம் படைத்து
ஸொந்தமாய் எண்பத்திநான்குலெக்ஷம், ஜீவராசியை, வகுத்து
ஸந்ததம்வீற்றிருக்கும் சதுர்முகாநின்றாள், போற்றி.

---

## விஷ்ணு ஸ்துதி.

### விருத்தம்.

எதுகுலதிலகமாக எசோதைமைந்தன் ஆனாய்
மதுரைமாநகர்கோனை மாமனையண்ணில், மாய்த்தாய்
சதுர்வேதஸாரமெல்லாம் தனஞ்சயன்தனக்குரைத்தாய்
மதுசூதனனே எந்தன் மனதினில்வந்துகார்ப்பாய்.

---

## சிவ ஸ்துதி.

### விருத்தம்.

திங்களும்கெங்கையும் செஞ்சடைதன்னில்கொண்டாய்
மங்களம்மாகத்தானேமங்கை, ஓர்பாகங்கொண்டாய்
செங்கையில்மான்மழுவும் சிறக்கவேஏந்திக்கொண்டாய்
சங்கைகள்எல்லாம்தீர்த்து சங்கராஎனையாட்கொள்வாய்.

---

## தேவி ஸ்துதி.

### விருத்தம்.

இருவினைக்குள்ளேயாகி இன்னம்நான்நொந்திடாமல்
ஸொரூபநிலைதனையடைந்து ஸுகமுற்றிலங்கவென்று
குருவடிவாகஇந்தக்குவலயம் தனில்எழுந்த
திருபுரயேதினமும்உந்தன் சிற்றடிக்கமலம்போற்றி.

---

## குரு ஸ்துதி.

### விருத்தம்.

பங்கையன் மாலும்தேடிப் பார்த்திடானந்தபாதன்
மங்கையோர்பாகம்கொண்ட மங்களமானரூபன்
அங்கையில் நெல்லிபோலே அன்பருக்கருளவென்று
சிருங்கையில்சிறக்கவந்த சங்கரகுருவே போற்றி ||
|| ஆரணத்துட்பொருளே ஆதரவாய்எனக்கு
தாரணையாய்உரைத்து சஞ்சலம்தன்னைத்தீர்க்கா
காரணகுருவாய்வந்து கடற்கரைதனில்எழுந்த
பூரணஸொரூபாஉந்தன் பொன்னடிக்கமலம், போற்றி
கோசமாம்குகைக்குள்ளாழ்ந்து நாசமாய்ப்போகும்போது
பாசமாம்கட்டவிழ்த்து தாஸனுய்ஆளவென்று
ஈசனே ஆசானகி நேசமாய்நிகிலம்வந்த
மாசற்றஜோதியேஉன் மலரடிபோற்றி, போற்றி.

---

## பொதுவணக்கம்.

### விருத்தம்.

எங்கிலும் புகழ்பெற்றோங்கும் ஹேமலேகையின்சரித்திரம்
மங்களமாக, இந்த மண்ணினிலுரைக்கவென்று
மங்கையாளானநானும் மனதினில்நினைந்துகொண்டு
பாங்குடன்பகரலுற்றேன் பத்மாஸனியாள் அருளினாலே.

---

ராகம்—தஞசி. **(4)** ஆதிதாளம்.

கனகஸபாபதி தெரிசனம் ஒருநாள்—என்ற வர்ணமெட்டு.

பஸ்லவி.

சிறுமதியாலிந்தசரித்திரம் உரைக்கலுற்றேன்
குருமொழியைக்கருதி.

அனுபல்லவி.

அறிவில்சிறந்தபெரியோர்களே இதில்
பிழைகளைப்பொறுத்தென்னை ஆதரிப்பீர்களே. (சி)

சரணங்கள்.

பாரகவருக்கு, பரிவுடனே தெத்தாத்ரேயர்
கீர்த்தியுடனுரைத்த ஹேமலேகைசரித்திரம்
பார்தனிலே, நானும் பரிவுடனேயுரைக்கா
சீருடனேஎனக்கு அனுக்கிரகிப்பீர், சிரக்க. (சி)

ஏதுமறியாதபேதமதியால்நானும்
இப்போதுரைக்கவென்று உள்ளந்தனில்நினைந்தேன்
ஸாதுக்களேநீங்கள் ஸந்ததமும்வந்து
ஓதும்படிக்கிசெய்வீர் உள்ளம் மகிழ்ந்து. (சி)

சித்தத்தில் குடிகொண்ட சின்மயானந்தமே
எத்திசையும் விளங்கும் அத்வைதஸொருபமே
சித்பரவெளிதன்னில் விளங்கிடும் தத்துவமே
பத்மாஸனியாய்வந்த பரிபூர்ணபாக்கியமே. (சி)

விருத்தம்.

அத்ரியின்புத்ரரான தெத்தாத்ரேயர்பாதத்தில்
பக்தியுடன் பார்க்கவரும் பரிவுடன் பணிந்துகொண்டு
எத்திசையும் புகழ்பெற்றோங்கும் முக்தர்கள் மகிமைதன்னை
விஸ்தாரமாய் எடுத்து, விளம்பிடல் வேண்டும் என்றார்.

ராகம்—கீர்வாணி. **(5)** ரூபதாளம்.

வரமுலுஸகி—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சிர்த்தையுடன் கேளாய் பார்க்கவனே கற்றோர்பெருமை.

அனுபல்லவி.

பாநிலையில் பதிந்திருக்கும்
பரமஹம்ஸர் மகிமைதன்னை. (சி)

சரணங்கள்.

ஸங்கலப்பவிகல்பம்செய்யும் சத்துருக்களின்தலையை அரிந்து
எங்கெங்கும் நிறைந்ததான ஏகம் நானே என்று தெரிந்து
சங்கைகள் எல்லாம் ஒழிந்து ஸதானந்தமாய் உள்ளம்குளிர்ந்து
பங்கமான பிறவிதீர்ந்து மங்களமாகமனதுமகிழ்ந்து. (சி)
நம்பிக்கையுடனிருந்துசொல்லும்மொழியை உள்ளில்கிரகித்து
ஸம்ஸாரபிரமையை, விடுத்து ஸந்தேகங்கள்யாவும் கெடுத்து
இம்மை, மறுமை பயத்தை ஒழித்து இரவிச்சுடர்நாமென்று [களித்து
அம்ஸோஹமே அகமென்று உணர்ந்து அந்தகன்பயத்தைத் [துறந்து (சி)

---

விருத்தம்.

முன்னொருகாலந்தனில் தசாரணதேசம் தன்னை
அன்புடன் ஆண்டுவந்தான் முக்தாசூடன் என்றோர் ராஜன்
இன்பமாய் மன்னுயிரை தன்னுயிர்போலே கார்த்து
உன்னிதமாக ஆண்டான் உலகிலுள்ளோர்கள் போற்ற.

---

ராகம்—அனந்தபைரவி. **(9)** ஆதிதாளம்.

என்னையும் வரச்சொன்னரோ என்றமெட்டு.

பல்லவி.

ராஜனரசாக்ஷி செய்தார் நேசமுடனே
ஈசன்மேல் மனதுவைத்து.

அனுபல்லவி.

ராஜாதிராஜர்கள் நாடி அடிவணங்க
பிரஜைகளிடத்தில் வெகுப்ரீயமதாக. (ரா)

சரணங்கள்.

இரவியை அதிக்ரமித்த தேஜஸுடனே
இருமைந்தர்களும் பிறந்தார்
வரத்தினுல்கிடைத்திட்டமைந்தர்களுக்கு ஹேம
சூடன் மணிசூடன் என்று நாமம், புனைந்தார். (ரா)

பலபலசடங்குகெல்லாம் செய்தார், மைந்தர்களுக்கு
பலகலைபொருளைப் போதித்தார்
உலகநடைகள்எல்லாம் ஒழுங்காய் அவர்க்குரைத்தார்
விலையில்லாரெத்னம்போல் விளங்கி மகிழ்ந்திருந்தார். (ரா)

---

விருத்தம்.

இப்படியாக, மைந்தர் ரவிகுலதிலகம்போல
தப்பர, வாழ்ந்து, வந்தார் தரணியுள்ளோர்கள்மெச்ச
ஒப்புமைஇவர்க்கில்லாமல் வில்வித்தைஎல்லாம்கற்றூர்
செப்பவொண்ணுததான மகிமைபெற்றவர்கள் வாழ்ந்தார்

---

ராகம்—ஸாவேரி. **(7)** ஆதிதாளம்.

ராஜனும் தசரதன் என்ற—வர்ணமெட்டு.

பல்லவி.

வேட்டையாடவென்று வேந்தன்மைந்தர்கள்
இருபேர்களும் நாட்டம்கொண்டார்கள்

அனுபல்லவி.

பொட்டனவேமந்திரி பிரதானிகளை எல்லாம்
கூட்டி, வரும்படிக்கு அரசனும் ஆளைவிட்டார். (வே)

சரணங்கள்.

அனைவரைங்கூட்டிக்கொண்டாரண்ணியம், தனில், போக
மான்கூட்டத்தைபார்க்கா அம்புகள் வில்லுகள் ஆயுதங்கள்
எடுக்க

அரசன்சிரக்க, மின்னலைப்போது நடக்க, அஸ்தரம்எடுக்க
அன்பாய்தொடுக்க, ஓட்டம்எடுக்க
துஷ்டமிருகங்கள்சாகவே, நோகவே, ஏகவே, ஆனந்தமாகவே,
இனிமேல்நமக்குக்கஷ்டம்தவிர்ந்தது காட்டைவிட்டு இனி
நாட்டுக்குபோவோமென்றூர் (வே)

திரும்பிடும்போதினில் கொடுங்காற்றொன்று அடிக்க
ப்ரஜைகள்துடிக்க சேனைசள்யானைகள் மூர்ச்சித்துகீழ்படுக்க
ராஜன்பிரமிக்க, குலைந்தார், சிலரலைந்தார், கூட்டம்கலைந்தார்
வேறாய்ப்பிரிந்தார் திசைதப்பியவர்ஓடினார், வாடினார்,
வேந்தன்நாடினார் துயர் அடைந்தனர்
ராஜபுத்திரர்இருபேரும் புரவிஏறி திக்குதிசை தெரியாமல்
மிகவும்வாடி (வே)

---

விருத்தம்.

இவ்விதமாய் அவர்கள் அளவொண்ணாத்துன்பம்கொண்டு
எவ்விதம் பிழைப்போம் என்று ஏக்கமாய் ஹேமகூடன்
அவ்வனம் எல்லாம்சுற்றி அலைந்திடும்வேளைதன்னில்
ஒவ்வ ஒண்ணாத வியாக்ரபாதர் ஆச்ரமத்தைக்கண்டார்.

---

ராகம்—சங்கராபணம். **(8)** ஆதிதாளம்.

சண்டைசெய்யும் அஸுரர்கள்நடுவோடே—என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

ஆசிரமத்தைநாடி அரசனும்வந்தார்—அதில்
ஆச்சரியங்களைகண்டு திகைத்துநின்றார். (1)

ஜாதிஜெண்பகம்முல்லைரோஜாவகையும்—அங்கே
ஓதிட அறியாதான விருக்ஷவகையும். (2)

தாமரைத்தடாகங்களும் அதின்மத்தியில்—அதி
கோமளாங்கமாய்விளங்கும் வண்டினங்களும். (3)

இந்திரனுடையபூங்காவனம்தானோ—இது
விந்தையாய்த்தவம்புரியும்ஸ்தலம்தானோ. (4)

இப்படிநினைந்தரசன்வரும்போது—அங்கே
செப்பொண்ணுவடிவோடொத்த ஒருமாது. (5)

நிற்பதையும் கண்டரசன் அதிசயித்து—இதில்
அர்ப்புதம் என்னவென்றுமிகபிரமித்து. (6)

லெக்ஷ்மியோ பார்வதியோ நாமறியோமே—அல்லால்
மாக்ஷிமையுடைய சதுர்முகன்தேவியோ. (7)

தங்கத்தையுருக்கி அயன்வார்த்தானோ—எந்தன்
அங்கத்தை உருக்குவதும் இவள்தானோ. (8)

இப்படியாக ராஜன்மனதிலெண்ணி—இதை
எப்படி அறிவதென்று யோஜனைபண்ணி (9)

கர்ப்பூரவிருக்ஷந்தன்னில் புரவியைக்கட்டி—அங்கே
அர்ப்புதமாய்நிற்கும் அரிவையைகிட்டி. (10)

ஆரும்துணையற்ற இந்தகானகம்தன்னில்—நீயும்
ஒருத்தியாக நிற்கும்வகை ஏதுசொல். (11)

என்றரசன் கேழ்க்கவே ஹேமலேகையும்—அப்போ
ஒன்றுபதிலெடுத்துரைப்பதாகியும். (12)

அரசனே இவ்வாஸனம்தன்னிலிருந்து—நீரும்
சிரமம்தணிந்தபின் என்னுடன்பேசலாம் என்றாள் (13)

காற்றால்அடிப்பட்டு காயம்மிகவருந்தி—இப்போ
ஆற்றலொண்ணாத்துயர்கொண்டாப்போலேகாணுதே. (14)

என்றுஅவள் உரைக்க அரசன்மகிழ்ந்து—அதில்
நன்றுஎன்று ஆஸனம்தன்னிலமர்ந்தான். (15)

பழவர்க்கங்களை எல்லாம் எடுத்துவந்து—அவள்
அழகாக அரசனுக்கு பரமாறினாள். (16)

உண்டு சிரமம் தணிந்து ராஜனிருக்கும்போது
விண்டுரைசெய்வாள் விரைவுடன்மாது. (17)
என்னிடத்தில்கேழ்க்கும் நீர்தான்ஆர்—என்று
அன்புடன்எடுத்தெனக்குரைத்திடும் இன்று. (18)

---

விருத்தம்.

என்றவளுரைக்கலுமே அப்போது ஹேமசூடன்
தன்னுடையவிர்த்தாந்தங்கள் ஸகலமும் சாற்றிநின்றான்
உன்னுடசரிதைதன்னை ஒளியாமலுரைப்பாய்என்று
அன்புடன் அரசன்கேழ்க்க அரிவையும் அரையலுற்றாள்.

---

ராகம்—பைரவி. **(9)** சாய்பு—தாளம்.

ஆருக்குபொன்னம்பலர்—என்ற வாணமட்டு.

பல்லவி.

எந்தனுட சரித்திரம் உந்தனிடம் உரைப்பேன்
உற்றுக்கேளும் அரசே.

அனுபல்லவி.

சிந்தயில்துயர்அற்று விந்தயாய்த்தவம்பெற்ற
வியாக்ரபாதமுனிவர் தர்மபுத்திரியாளான. (எ)

சரணங்கள்.

வித்யுத்பிரபாஎன்ற வித்தியாதரஸ்திரீயும்
வேணுஎன்ற நதியில் ஸ்நானம்செய்யவருவாள்
அத்தினம்தன்னிலே ஸுஷேணன் என்றஅரசன்
வித்தியாதரஸ்திரீயை கண்டுகாதலடைந்தார். (எ)

அல்புதமாகவே அவர்களிருக்கும்போது
உல்பாதமாகஎன்னை கெர்ப்பம்தரித்தாள்மாது
என்னசெய்வதுஎன்று ஏக்கம்மிகஅடைந்து
இன்னதிகரையினில் ஈன்றுசென்றாளப்போது. (எ)

ஸந்தியாவந்தனம்செய்ய அந்நதிகரைதன்னில்
வந்தார் வியாக்ரபாதமுனிவரும் என்னைக்கண்டார்
ஸொந்தமுடனெடுத்து சிந்தைமகிழ்ச்சியுடன்
இந்தஆசிரமம்தன்னில் விந்தையாகவளர்த்தார். (எ)

---

விருத்தம்.

அரிவைபின்வடிவைக்கண்டு அரசனும்காதலகொண்டு
பொரிபுலன்மிகத்துவண்டு புத்தியும்மயக்கமாகி
அறிவிழந்திருக்குமந்த குறிதனைஅறிந்தமாது
திறமுடனிருப்பீர்இப்போ தவமுனிவருவாரென்றாள்.

---

ராகம்—மோகனம். **(10)** ஆதிதாளம்.

ராமனை கண்ணாரக் கண்டானே—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வியாக்ரபாதரும்வந்தாரே ஆசிரமம்நாடி. (எ)

அனுபல்லவி.

வியாக்ரபாதரும்வந்தார் வியப்புற்றுஅங்கேநின்றார்
வேந்தன் எழுந்துமுனிதாளிணையில் பணிந்தார். (வி)

சரணங்கள்.

பிர்மநிஷ்டர்கள்தினம் பூஜிக்கும்படிபெற்ற
கர்மவலைகடந்து கைவல்யநிலையுற்ற
நிர்மலமானசுத்த நிர்க்குணத்தோடொத்த
தர்மார்த்தம்முதலாக சதுர்வேதமும்படித்தா. (வி)

சிவஸாயுஜ்ஜியத்தைபெற்று சிந்தைத்துயரமற்று
தவம்சிரக்கவே கற்றுஸதானந்தநிலையுற்று
பவக்கடலைதுற்று பரநிலைதனைஉற்று
அவமே இந்தஉடல் உலகவாழ்க்கைகளென்று. (வி)

அந்தமுனிவரும் வேந்தன் எண்ணத்தையறிந்து
சிந்தைதனில் மகிழ்ந்து மெத்தகிருபையடைந்து
ஸொந்தமுடனே ஹேமலேகைதன்னை அழைத்து
இந்தாகன்னிகை என்று தாரைவார்த்துகொடுத்து. (வி)

---

விருத்தம்.

அரமுனிவர்பாதம்தன்னில் இருவரும்பணிந்துகொண்டு
அரண்மனைதன்னிலேக அனுமதிதருவீர்என்று
அரசனும்கேழ்க்க அப்போதவமுனிவிடையளித்தார்
அரிவையை அழைத்துக்கொண்டு அரசனும்நகரம்சென்றார்.

---

ராகம்—முகாரி. **(11)** தாளம்—சப்பு.

பொன்மானுக்காசைப்பட்டு—என்ற வர்ணமெட்டு.

காவடிசிந்து.

பட்டணத்தைநாடிப்பொட்டனவே அரசனும்பிரயாணமானார்.
திட்டமுடனே கானகங்களெல்லாம்கடந்து நகரம்வந்தார். 1.
அரசன்மைந்தன்வரும் சேதியைக் கேட்டு அமைச்சன்மிக
[மகிழ்ந்து
திரமுடனேதெருவீதிகளெல்லாம்சிரக்க அலங்காரித்தார். 2.
யானைசேனைபரிவாரத்துடனே எதிர்சென்றழைத்துவந்தார்
மானைஒத்தவிழியாளான ஹேமலேகையுடன் வேந்தன்
[சென்றார். 3.
தந்தைதாய்பந்துவர்க்கங்களைகண்டிருபேரும் நமஸ்கரித்தார்
ஸொந்தமாய் மைந்தனைக்கண்டு அரசனும் சிந்தைமகிழ்ச்சி
[கொண்டார். 4.
வேதவிதிப்படிமைந்தனுக்கு விவாகம்சிரக்கச்செய்தார்
பேதமில்லாமல் பிரஜைகளிடம் வெகுப்ரியமாய்வாழ்ந்துவந்
[தார். 5.

ஸுகமாகவே ஹேமலேகையுடன்போக்கியமெல்லாம்
[புஜித்தான்.
அகமகிழ்ச்சியாய் அனேகநாளாக அரசாக்ஷிசெய்துவந்
[தார். 6.

---

விருத்தம்.

இப்படியாயவர்கள் இருந்திடும்நாளை தன்னில்
இப்புவிவாழ்க்கைஎல்லால் ஸொப்பனம்என்றுஎண்ணி
எப்பவும் ஹேமலேகை ஏகம்நாம் என்றுசொல்லி
ஸொப்ரகாசவடிவாய் ஸொருபஸமாதியமார்ந்தாள்.

---

ராகம்—இந்துஸ்தான் காப்பி **(12)** ஆதி—தாளம்.

காவிலே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பிர்ம்மானந்த பேரின்பநிஷ்டையில் பிரியமுடன் இருந்தாள்
ஹேமலேகை. (பி)

அனுபல்லவி.

நிர்மலநித்தியஸுகானந்த
நிரதிசையானந்தமாய் நிர்விசேஷ. (பி)

சரணங்கள்.

கருவிகரணவிர்த்திகளற்று கைவல்யநிலையையுற்று
பரிவானபிரணவஸமாதியை பாங்குடன் அவள்பெற்று
உரிதானஉபநஷத்வாக்கியத்தை
ஊக்கத்துடனேகற்று உருதியாக. (பி)

போக்குவரவற்றபோதப்ராகாசமாகவேநிறைந்து
ஜாக்ரஸொப்னஸுஷுப்தியென்று அவஸ்தைமூன்றும்கடந்து
வாக்கியார்த்தரெஸம்தன்னை புஜித்து
வஸ்துநிலையைக்குறித்து நீக்கமற. (பி)

விருத்தம்.

ஸொருபஸமாதிதன்னில் ஸுகமாகஇருந்தாள்மாது
இருவினைபிணியுமற்று ஏகமாய்மனமகிழ்ந்து
இருந்திடும்வேளைதன்னை இறைவனும் கண்டபோது
அருகினில்வந்துமெள்ள அன்புடன் அழைக்கின்றாரே.

---

(13) சாய்புதாளம்

காவடிசிந்து (முசுவண்டுவாஸம்உண்டு—என்ற வர்ணமெட்டு.)

அன்புடனேஹேமலேகை அண்டையிலரசன்வந்து
இன்பமாக ஓர்வசனம்உரைக்க அவர்
சொன்னதறியாமலவளிருக்க. 1.

அரசனுமதையறிந்தடங்க ஒண்ணாத்துன்பம்கொண்டு
பரபரப்புடனோர்வார்த்தையுரைப்பார் பின்னும்
திரமுடன்னவளைக்கண்டு களிப்பார். 2.

மெத்த மெத்தநாடுநகர்போகபாக்கியங்களிருக்க
பித்தம்கொண்டாப்போலெ ஏன்இருக்கின்றாய் எந்தன்
சித்தத்திர்க்கேன்துயரம் கொடுக்கின்றாய். 3.

எந்தவேளையுந்தனைநான்வந்துபார்த்தாலும்அப்போது
இந்தவிதம் நிஷ்டையிலிருக்கின்றாய் இந்த
விந்தையைஎந்தனிடம்உரைத்திடாய். 4.

மன்மதனைஒத்ததானஎன்ஸொரூபம் உந்தனுக்கு
இன்பம்கொடுக்காததென்ன சொல்லுவாய் இப்போ
அன்னமேஎன்ஸந்தேகத்தைக்கெல்லுவாய். 5.

பிரியமானபதார்த்தங்கள் வெகுவிதமாய் இங்கிருக்க
அப்பிரயமாய்இருப்பதென்னபெண்மணி அதை
அறியும்படிக்கியுரைப்பாய் கண்மணி. 6.

---

விருத்தம்.

இந்தவிதமாகராஜன் இயம்பியமொழியைக்கேட்டு
சிந்தையில்முறுவல்கொண்டு சிறப்புடன்ஹேமலேகை
விந்தையாய்வேந்தன்சிந்தை மகிழ்ந்திடும்வகையோஜித்து
ஸந்தோஷமாக நன்றாய் சாற்றிடலுற்றாள்மாது.

---

ராகம்—பந்துவராளி **(14)** ஆதிதாளம்.

ஶ்ரீஜாவேகேளும்மையா—என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

கேளும்ராஜகுமார நானிப்போதுரைக்கும்மொழிக்கு
பதில்லுரைத்து என்னை ஆளும்ராஜகுமாரா (கே)

பிரியவஸ்துதானேது உலகினில் அப்பிரியமானபதார்த்தம்
ஏது

அறியும்படிஎனக்கு அன்பாய்எடுத்துஉரைத்திடுவீர் (கே)

ஏதும்மறியாஸுத்தபேதமதியாள் நானுனதினால்
ஓதுவீரஎந்தனுட ஸந்தேகம்யாவும் தீர்த்திடுவீர். (கே)

அன்னமயத்தைக்கண்டோ நீர் அழகாய்இருக்கென்றுரைக்கு
கின்றீர்

என்னசுகமிருக்குஅதை இன்பமாய் எனக்குஉரைத்திடுவீர்
(கே)

பெந்துவர்க்கங்களெல்லாம் நீர்ஸொந்தமாமென்றுஉரைப்
பீராகில்

சந்தைக்கூட்டத்தைப்போல இந்தநிமிஷத்தில்மாய்த்திடுமே
(கே)

நாடுநகரங்களும் நீர்தேடும்பொருளும் உன்தேவிகளும்
கூடுவிழும்பொழுதுகூடே எழுந்துவருவார்களோ
(கே)

அனித்தியஸம்ஸாரம்தன்னில் ஆசக்திமுற்றும் ஒழித்திடுவீர்
இனிமேல்சித்ருபமான சின்மயம்தன்னில்லயித்திருப்பீர் (கே)

இப்ரபஞ்சவாழ்கைகள் ஸொப்பனம்போலவேபோகுமென்று
அப்போதறிந்துநீரும்ஸொப்ரகாசவடிவாயிருப்பீர். (கே)

---

விருத்தம்.

அவள்ளுரைசெய்ததெல்லாம் அரசனும்அன்பாய்கேட்டு
குவலயவாழ்க்கைஎல்லாம் குன்னமென்றறிந்துகொண்டு
பவமென்னும்கடலைத்தாண்டும் வழியறியாமல்நொந்து
கவலைக்குள்ளாகிவேந்தன் காலமும்கழிக்கின்றனே.

---

ராகம்—ஹிந்துஸ்தான்தோடி. **(15)** ரூபகதாளம்.

(சங்ராசிவ சங்ராசிவ—என்ற வர்ணமெட்டு.)

இந்தவிதம்மாகராஜன் சிந்தைமிகவும்நொந்து
எந்தவிதம்தத்துவத்தையறிவோம்மென்றுஏக்கம்கொண்டு 1.

உலகவிஷயத்தைக்கண்டு களிப்பார்சிலவேளை அதில்
பலபலகுற்றத்தைக் கண்டுகவலைகொள்வார் அவ்வேளை 2.

பொரிபுலங்கள்பின்னேசென்றவர் போகத்தில்லிச்சைகொள்
வார் தன்
பிரியைசொன்னகுற்றங்களை எண்ணிபின்னுக்கு அவர் நிர்பார்
3.

பித்தங்கொண்டவர்போலவே அவர்புத்திமயக்கம்கொள்
வார் இனி
எத்தொழில் செய்வதுஎன்றறியாமல்லவர்நிர்ப்பார். 4.

நாடுநகர்வீடுகளெல்லாம் காட்டைப்போலவர் நினைத்தார்
முக்தி
வீடுதேடிஎக்காலத்திலும் கவலைகொண்டவர்இருந்தார். 5.

மைந்தர்மனைவி சுற்றங்களெல்லாம் சுத்தபொய்யென்று
அறிந்தார்
வையகத்தாசைஒழித்து வஸ்துவை ஸதாநினைத்தார். 6.

அல்லும்பகலும்,சொல்லவொண்ணாதுயரம், கொண்டவர் இருந்
தார்
அல்லல்தீர்ந்திருக்கும் வழிஅரியாமல்சிந்தைகுலைந்தார் 7.

---

விருத்தம்.

தரணிபன்இவ்வாருக தத்தளித்திருக்கும்அந்த
குறிதன்னைஅறிந்து ஹேமலேகையும்அருகில்சென்று
பரபரப்புடனே அந்த அரசனின்கரத்தைப்பற்றி
பரமசந்தோஷமாக பகர்ந்திடலுற்றனளே.

---

நோட்டு—ஏகதாளம் **(16)**

கலகம் செய்திடாகரத்தில் வீணையை—என்ற வர்ணமெட்டு.

நாதனேநீரும், நவிலவொண்ணாத
துயரம்கொண்டாப்போல், இருப்பதேன்னையா,
வேதனை எல்லாம்தீர, விரைவுடன்னுக,
ஓதிடுவீர், எந்தனிடம், உண்மையையிப்போ. 1.

அரவிந்தத்தைப்போல் இருக்கும்முகத்திர்க்கு
அரசனே வாட்டம், வந்தவகை என்ன
திறமுடன்நம் ராஜியத்தை பகையரசர்கள்
பற்றிக்கொண்டுமக்கேதேன் துயர்செய்தார்களோ 2.

தேகத்திர்க்கேதேன், பீடைகளுண்டோ
வேகமாய் என்னோடுரைக்காதேன், கொண்டோ,
சோகம், கொண்டிருக்குகின்ற காரணம் தன்னை
காவலனே, என்னிடத்தில், கழன்றிடுவீரே. 3.

இந்தமொழியை, வேந்தனும்கேட்டு,
சந்தோஷமாக, சாற்றுவர்பதில்,
சுந்தரியே, எந்தனுட சிந்தைநினைவை
உந்தனிடத்தில், உரைப்பேன், உற்றுகேட்டிடாய். 4.

உந்தன்மொழியைக் கேட்டபிறகு
இந்த உலகபோகங்களெல்லாம்
விந்தையாக எந்தனுக்கு தோன்றுவதினால்
சிந்தையில் வியாகூலம்கொண்டிருக்கிறேன் என்றான். 5.

விருத்தம்.

மன்னனின் மொழியைக்கேட்டு, மங்கையும் மனமகிழ்ந்து
அன்னையாள்திருபுரையின் அனுக்கிரகத்தாலே அன்றோ
இன்னவர் இவ்வழிக்கிரங்கினார் என்றுஎண்ணி
தன்னுட அனுபவத்தைகதையாக சாற்றலுற்றாள்.

ராகம்—ஆரபி. **(17)** ஆதிதாளம்.

முக்திநெறியறியாத—என்றவர்ணமெட்டு.

திருபுரையுடசிற்றடியைஹிருதயம்தன்னில் த்யானம்பண்ணி
ஸொருபநிலை ராஜனுக்கு உரைக்கவென்று அவள்எண்ணி. 1.

பரிவுடன் தன் அனுபவத்தை கதையாகவேதொகுத்து
உரிதாகவேந்தனுக்கு உரைக்கவென்றுஉத்தமிநினைத்து. 2.

சங்கைகளெல்லாம்வென்றுதத்துவத்தை உரைக்கவென்று
மங்கையவள்மனதில் எண்ணிமகிழ்வுடனே உரைக்கலுற்
[றாள். 3.

கேளுமையா அரசனேஉம்கிலேசங்கள்ளெல்லாம் ஒழித்து
என்னாளும் அழிவில்லாத நாதாந்தமானநிலை. 4.

முன்னொருகாலம்தன்னில் சித்ரூபியானஎனதன்னை
அன்புடன்நான் விளையாடபுத்தியென்றபாங்கியை அளித்
[தாள். 5.

இருவர்களும் இணைபிரியாப்ரீயமாக இருக்கும்நாளில்
கெர்விஷ்டையவித்தைவந்து புத்தியைதன்வசம் கொண்
[டாள். 6.

அவித்தையுடன் புத்திசேர்ந்திடவே அறிவிழந்தாள் அப்பொ
[ழுது.
வித்தையான எனதன்னையும் புத்தியைக்கவனியாமலே இருந்
[தாள். 7.

ப்ராணனிலும்மிகப்ரியமாக அவளிடத்தில்நான் இருந்ததினால்
ப்ரேமையுடன் போகுமிடம்எங்கிலுநான் தொடர்ந்துசேல்
[வேன். 8.

அசதியுடமைந்தன் தன்னை அன்புடன்புத்திமணந்துகொண்டு
இசைவுடனேமோகனுடன் ஈரேழுலகும்சுற்றிவந்தாள். 9.

என்னுடைய முன்னிலையில் அவித்தைபுடமைந்தனப்போ
அன்புடன் என்தோழிதன்னை அனுதினமும்அனுபவித்
[தான். 10.

அரைக்ஷணமும்அவளைவிட்டுஅகன்றிடாமல் நான் இருந்ததி
[னால்
விரைவுடனே அசதிமைந்தன் எந்தனையும்கைபற்றிக்
[கொண்டான். 11.

---

விருத்தம்.

சித்தான அன்னை தன்னை சுத்தமாய்மறந்துவிட்டு
புத்திஎன்னும்மங்கையாளும் மோகனைகூடிக்கொண்டு
எத்திசைகளிலும்சுற்றி ஏகாந்தமாகவாழ்ந்தாள்
அத்தினம்தன்னில்மனம் என்றபுத்திரனை ஈன்றாள்.

---

ராகம்—நாதநாமகிரியை. **(18)** ஆதிதாளம்.

சரணகதியடைந்தேன்—என்றவர்ணமெட்டு.

பல்லவி.

மைந்தனும்பிறந்தானே புத்திக்கிமனமென்னும் நல்லா. (மை)

அநுபல்லவி.

தையலாள் அவித்தயின்குணமும் மோகனுடைய
ரூபமும் மாகா நல்லா— (மை)

சரணங்கள்.

விதவிதமான விசித்ரசிருஷ்டிகள் செய்வான்
பாதளம்முதல் அந்தரிக்ஷம்மட்டிலும் செல்வான்
பிதாமொழியையொருநாளும் மறந்தறியான்
மேதாவியாகச்சிறந்தான் நல்ல. (மை)

இல்லாததைஎல்லாம் உள்ளதாகவே சொல்வான்
வல்லமையாலேவானுலகமெல்லாம் சுற்றுவான்
கல்லாததை எல்லாம் கற்றதுபோல்பாவிப்பான்
பொல்லாதலீலைகள்செய்வான் நல்ல. (மை)

ஓயாமலேதினம் ஓடிக்கொண்டேஇருப்பான்
தாயானபுத்திக்கிஸந்தோஷத்தை கொடுப்பான்
காயமேமெய்என்று கருதும்படிக்குரைப்பான்
மாயையின் சொல்லைக் கேள்ப்பான் நல்லா. (மை)

---

விருத்தம்.

புத்திரன்செய்கின்ற விசித்திரமெல்லாங்கண்டு
புத்தியும்புகலொண்ணு ப்ரேமை மைந்தன்மேல்கொண்டு
மெத்தசந்தோஷமாக புத்திரன்பார்த்தாவோடும்
எத்திசைகளிலும்சுற்றி எந்தனைமறந்துவிட்டாள்.

---

ராகம்—நாதநாமகிரியை. **(19)** சாய்பு—தாளம்.

பெரும்சண்டை கேளீர்—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அரசாக்ஷிகேளீர் அஸ்திரன்செய்த விசித்திரத்தைபாரீர்.

அனுபல்லவி.

உஸ்ஸாகத்துடன்மோகன் பட்டம்தன்னைகிரகித்து
அஸ்தியாங்கிஷ கோட்டையின்குள்ளிருந்து
விஸ்மயமாகவே சபலைதனைமணந்து
விஸ்தாரமானமனோராஜியம் ஆண்ட அதிசயம்பாரீர். (அ)

சரணங்கள்.

கர்ப்பனையென்னும், பெண்ணும், கணத்துக்கொருரூபம்
அர்ப்புதமாய்எடுத்து, மனமென்னும், அரசனை
சர்ப்பனையாலேதன், வசமாக்கியே, கொண்டு
கெர்வத்துடன்மோகன், மைநதன் தன்னை, க்கூடி
கெர்ப்பம்தரித்தாள், அப்போது, மாது, அர்ப்புதமாக.
ஞானேந்திரியம்என்னும் ஐந்துமைந்தர்பிறக்க
தானேவளர்க்கும்சக்தி அவர்க்கில்லாமால்
என்னிடத்தில்கொண்டு அன்புடன் அவாள்விட
உன்னிதமாய்வளர்த்தேன் தோழிமேல்ப்ரீயத்தால்
வல்லமையில்சிறந்த செல்வமைந்தரைக்கண்டு
எல்லை யில்லாத ஆனந்தம் அஸ்திரன்கொண்டு
தனித்தனியாய் அவாள்க்கு தகுந்தகிரகமமைத்து
உன்னிதமாய்அவாள் உகந்திருக்கும்போது
தன்பிதாவானமோகனேன் அழைத்துக்கொண்டு
துன்பமில்லாமல்ஸுகமுற்றிருக்கின்ற சீர் தன்னைபாரீர்.

---

விருத்தம்.

இவ்விதமாக அஸ்த்ரன் ஐந்துமைந்தர்களோடும்
செவ்வையாய்செங்கோல்தன்னை செலுத்திடும்நாளை தன்னில்
வெவ்வேறுகிரகமமைத்துஐவரும் பிரிந்துவிட்டார்
அவ்வேளைதன்னில் அஸ்த்ரன் ஐவர்கிரகமும்செல்வானே.

---

ராம்கம்—ப்யாக். **(20)** ஆதி—தாளம்

இவ்விதம் துஷ்யந்தன் இருந்திடும்போது—என்ற மெட்டு.

இப்படி ஐவர்களும் பிரிந்திருக்கும்போழுது
சப்தமென்றமைந்தன் கிரகத்துக்கஸ்த்ரன்சென்றான் 1.
தந்தைவரவுகண்டு ஸந்தோஷமிகக்கொண்டு
ஸொந்தமுடனழைத்து உபசாரம்செய்தான் 2.

ஸங்கீதங்களை எல்லாம் பாடுவான் சிலவேளை
இங்கிதமானமொழி கூறுவான்சிலவேளை 3.
ருக்கெஜீர்ஸாமம் அதர்வணவேதங்களை எல்லாம்
முக்காலங்களிலும் முழங்கும்படிக்கிச் செய்வான் 4.
சாஸ்திரத்தில்உள்ள மந்திரங்களினுலே
ஸோஸ்திரம்செய்குவான் தந்தையைஒருவேளை 5.
ஆகமஇதிகாஸபுராணங்களை எல்லாம்
வேகமுடன் அவன் ஓதுவான் சிலவேளை 6.
வண்டினங்களின்தொனி குயில்மயில்களின் சப்தம்
எண்டிசைகளிலும் முழங்கும்படிக்கிச் செய்வான் 7.
புத்திரன்செய்கிற உபசாரங்களைக்கண்டு
மெத்தசந்தோஷம் அஸ்தரன்சித்தத்தில்கொண்டு 8.
பொருமையுடன் அவன் இருந்திடும் வேளையில்
அருவருப்பானகார்யம் செய்யலுற்ருன் மைந்தன் 9.
சிங்கத்தின்தொனிபோலேகெர்ஜ்ஜிப்பான்சிலவேளை
அங்கம்பதறும்படி ஆர்பரிப்பான் ஓர்வேளை 10.
இடிஇடித்ததுபோலே கோஷிப்பாருெருவேளை
கொடூரமானமொழிகூறுவான்சிலவேளை 11.

---

விருத்தம்.

புத்திரன்செய்யுகின்ற உபத்திரவமெல்லாம்கண்டு
சித்தத்தில் அஸ்தரனும் செப்பொண்ணுதுயரங்கொண்டு
புத்தியும்மயக்கமாகி இருந்திடும்போதுஸ்பரிசன்
மெத்தஉபஜாரம்செய்து தன்கிரகமழைத்துச் சென்ருன்

---

ராகம்—சங்கராபரணம் **(21)** ஏகதாளம்

நலுங்கிடவாரும் கண்ணு—என்ற வர்ணமெட்டு.

அஸ்த்ரனென்னும்பேர்கொண்ட மனமென்னும்மன்னனைப்போ
உஸ்ஸாகத்துடனேரெண்டாம் புத்திரன்கிரகத்தில் சென்ருன் 1.

சிந்தைமகிழ்ச்சியுடன் தந்தையையழைத்துசென்று
விந்தையுடனேநல்ல ஆஸனத்தில்இருக்கசெய்தான் 2.
விதவிதமானநல்ல வஸ்திரபூஷணங்களும்
நிதமும்பிதாவிர்க்கு இதமாக அளித்திடுவான். 3.
உஷ்ணஸ்பரிசங்களும் சீதஸ்பரிசங்களும்
பக்ஷமுடனேயவன் பாங்காயளித்திடுவான். 4.
இந்தவிதமாகவே இருந்திடும் வேளைதன்னில்
நிந்தனையானகார்யம் செய்யலுற்றானவ்வேளையில் 5.
கடினஸ்பரிசங்களைகண்டுசகித்திடாமல்
துடிதுடித்துஅஸ்தரனும் அவிடம்விட்டேகிவிட்டான். 6.
தீபப்ரகாசம்போலே விளங்கிஇருக்கும் அதி
ரூபம்மென்னும் மைந்தன் க்ரகத்தில்சென்றுவிட்டான். 7.
பற்பலவர்ணங்களிலிருக்கும் பதார்த்தங்களை
அர்ப்புதமாகரூபன் எப்பொழுதும் காண்பிப்பான் 8.
ப்ரியமாகஇருக்கும் உருவத்தையும் காண்பிப்பான்
அப்ரியமாயிருக்கும் உருவத்தையும் காண்பிப்பான் 9.
அழகானஉருவைக்கண்டு அஸ்தரன் ஆனந்தம்கொள்வான்
அழகற்றவடிவைக்கண்டு அடங்க ஒண்ணு கோபம்கொள்
வான் 10.
இவ்விதமாகஅவன் துயர்கொண்டிருக்கும்போது
அவ்வேளையில்ரஸமென்றமைந்தன் அழைத்துசென்றான் 11.
பழவர்க்கங்களை எல்லாம் பாங்குடன்கொண்டுவந்து
அழகாகதந்தைக்கவன் அனுதினமும் கொடுப்பான் 12.
ஷட்ரஸத்துடன்நல்ல போஜனமுமளிப்பான்
சட்டமாய்புஜித்தஸ்த்ரன் கஷ்டங்கள் அற்றிருப்பான் 13.
தித்திக்கும்பதார்த்தங்களை. திருப்தியாகபுஜிப்பான்
அதிகசப்பானதினில் அப்ரியமிகக்கொள்வான் 14.

இந்தவிதமாகவே இருந்திடும் வேளைதன்னில்
கெந்தமென்னும் ஐந்தாம் மைந்தன் கிரகத்தில்சென்றான். 15.
வாஸனையுள்ளதான புஷ்பம்மிகக்கொடுக்க
மந்தகாசத்துடனே அஸ்த்ரன் அவ்விடத்திலிருக்க. 16.

---

விருத்தம்.

இப்படியாக அஸத்ரன் ஐந்துபுத்திரர்களோடும்
ஒப்பற்றபோகபோக்யம் புஜித்தவன் இருக்கும்போது
செப்பிடாவடி வோடொத்த மகாஸனை என்றோர்மங்கை
அப்பொழுதங்கேதோன்ற அவளையும் மணந்தானஸ்த்ரன்.

---

ராகம்—தஞசி. **(22)** ஆதிதாளம்.

தாளேலேஞதா—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

கேளும் என் நாதா அஸ்த்ரன்விசித்திரம் கேளும்என்நாதா.

அனுபல்லவி.

நாள்தோறும்மைந்தர்கள் ஐவருடனும்சென்று
அளவற்றவிஷயங்களை அனுதினமும்புஜிப்பான். (கே)

சரணங்கள்.

மகாஸனைஎன்னும்நல்ல மகத்தானபேர்கொண்ட
ஆசையென்னும்பெண்ணும் அவ்வேளை தன்னிலே
ஸகலவிஷயங்களேன் க்ஷணத்தில்புஜித்துவிட்டு
ஸந்ததமும்அஸ்த்ரனை ஏவிக்கொண்டேஇருந்தாள். (கே)

இந்தவிதமாக மகாஸனையும் இருக்க
அந்தவேளையில்அவள் கெர்ப்பமும்தரிக்க
விந்தையுடனேஇரண்டு மைந்தர்களும்பிறக்க
நிந்தியவ்ருத்தன் ஜ்வாலாமுகன் என்றுபேர்தறிக்க. (கே)

---

விருத்தம்.

ஜ்வாலாமுகன் நிந்தியவ்ருத்தனிருமைந்தருடனும் சேர்ந்து
குவலயமெங்கும்சுற்றி கூறவொண்ணுதுயரம்கொண்டு
கவலைக்குள்ளாகிஅஸ்த்ரன் கலங்கியேஇருக்கும்போது
அவ்வளவையும்கண்டு புத்தி அடங்கொண்ணுதுயர்கொண்டா
[ளே.

---

ராகம்—கமாசு: **(23)** சாய்புதாளம்.

சரணம் சரணம் என்றுனே—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

புத்தியும்மயக்கம் கொண்டாளே புகல ஒண்ணுத
ப்ரேமையும்மைந்தன்மேல் கொண்டாளே.

அனுபல்லவி.

நித்தியமும்புத்திரரால் மெத்தமெத்ததுயர்கொண்டு
சித்தத்தில் வியாகூலமாகி பித்தம்கொண்டவர்போலவே. (பு)

நிந்தியவ்ருத்தனுடன் கூடினல் உலகிலுள்ளோர்
நிந்தித்து இகழ்வதினல்
எந்தனுடதோழிகண்டு பேசவும் சக்திகளற்று
பெந்தத்துக்குள்ளாகியவள் பிணம்போலேஆனுள் அன்
[னுள். (பு)

தோழியின்மேல் பிரியத்தினலே அவளைவிட்
டரைநாழியும் பிரியாததாலே
ஊழிகாலமாய்இவர்கள் இவ்விதம்உழல்வதாலே
பாழ்வினையால் நானும் அவர்க்குள்ளே அகப்பட்டதாலே (பு)

---

விருத்தம்.

இந்தவிதமாய்எல்லோரும் இருந்திடும்நாளை தன்னில்
முந்தியகர்மத்தாலே அனைவரும் ஒன்றுசேர்ந்து
விந்தயாயிருக்கும்தெசத்வார பட்டணத்தைக் கண்டார்
சொந்தமாய் அவிடந்தன்னில் அன்புடன் குடிசென்றூர்கள்.

---

ராகம்—செஞ்சுருட்டி. **(24)** ஆதிதாளம்.

வீதைஸகிகளுடன்கூடி—என்ற வர்ணமெட்டு.

தேசத்வாரபட்ணத்தைகண்டார் அதில்
இசைவுடன்யாவர்களும்சென்றார்
அசதியும்மோகனும் அப்பட்டணத்தில்முன்னதாக
நின்றாள் அவாள் நின்றாள். 1.

புத்தியான அன்னையுடன் சென்றான் அஸ்தரன்
மெத்தவும் ஆனந்தம் அவள்கொண்டாள்
பத்தினிஇருவர்களும் புத்திரன்ஏழுபேருமாய்
வந்தாள் அவாள் வந்தாள். 2.

ஜ்வாலாமுகன் நிந்தியவ்ருத்தனாலே அவன்
ஸ்வதந்திரம் இழந்தான் அப்பாலே
கவலைக்குள்ளாகிஅஸத்ரன்காலம்கழிக்குகிறான்
அக்காலே துயராலே. 3.

பத்தினிஇருவர்களினாலும் அப்போ
மெத்தவும் வஞ்சிக்கபட்டான்மேலும்
நித்தியமும்புத்திரரால் துக்கஸுகங்கள்
அனுபவித்தான் சித்தம் ப்ரமித்தான். 4.

ஒத்துமைபுடன் எல்லோரும்கூடி அங்கே
மெத்தவும்சந்தோஷம் கொண்டுவாழ்ந்தான்
புத்தியானதோழியின்மேல் மெத்தவும் ப்ரியத்தினாலே
நானும் அதில் சேர்ந்தேன், 5.

---

விருத்தம்.

இவர்களை எல்லாம்நானும் ரெக்ஷிக்கமுயன்றதாலே
கவலைக்குள்ளாகிஅப்போ உயிர்இழந்தவர்போலானேன்
அவனியில்உள்ளோர்எல்லாம் அனியாயமாகஅப்போ
விபசாரிஎன்றெனக்கோர் விபரீதபேர் இட்டாளே

---

ராகம்—ஸௌராஷ்டரம். **(25)** தாளம் சாய்ப்பு.

அந்தமானிடசண்டையில்—என்ற வர்ணமெட்டு

பல்லவி.

துஷ்டைஅவித்தையுடன்கூடி நான்பட்ட
கஷ்டத்தை என்னசொல்வேன்

அனுபல்லவி.

நஷ்டமாய்என்னைஸ்வரூபநிலைஅறிய ஒட்டாமல்மறித்தாளே
துஷ்டமூடனுடன் சேர்த்தாளே
பெருங்கஷ்டத்துள்கொண்டடுத்தாளே
மட்டற்றதுயர்விளைத்தாளே. (து)

சரணங்கள்.

ஒருக்ஷணமாகிலும் அவர்களைவிட்டுபிரிந்திருப்பேனுகில்
ஒருவர்களாகிலும் அவ்விடந்தன்னில்
ஒளிபெற்றிருந்திடார்அதினுல் பொருமையுடனேநான்
அவ்விடம்தன்னில் அனேகநாளாயிருந்ததினுல்
கெர்விஷ்டைஅவித்தைமைந்தனைக்கூடி நானும்
அறிவிழந்துஎங்கும்திரிந்தேன்
பெரும் துன்பக்கடலுக்குள் விழுந்தேன்— யாரும்
அருவருக்கும்படி நடந்தேன்
துர்விஷயத்தில்சேரும் அஸ்த்ரன் சபலையால்
சஞ்சலவடிவையும்அடைந்தேன் நான் அப்போது (து)
ஸ்வரூபநிலையை அறிந்தமெய்ஞானிகள்
சித்ரூபிஎன்றென்னை உரைப்பாள்
அவனியில்லுள்ள அறிவற்றமானிடாள்
ஆபாஸபேர்சொல்லி அழைப்பாள்
சிவஸ்வரூபியான சித்தான அன்னையை
தூஷணைசொல்லவே துணிவாள்
அவமானகாரியங்கள் அனேகவிதம்செய்து
பவக்கடலில்கொண்டுவிடுவாள்

சவம்போலே புத்தியும்கிடப்பாள் அதினால்
அவர்கள் கூட்டங்களில் என்னையும்சேர்த்து
அவதிப்படும்படிசெய்தாள் அவ்வேளையில் (தூ)

---

விருத்தம்.

துர்மதியுள்ளோர்என்னை தூஷித்துரைத்திட்டாலும்
நிர்மலமானஎந்தன் அன்னையின் கிருபையினாலே
தர்மவழிதனில்நடக்கும் ஸாதுக்களாயுள்ளோர்கள
ஸர்வக்ஞஎன்றுஎன்னை ஸாகஸமாய் உரைப்பாள்

---

ராகம்—வேகடை. **(26)** தாளம்—சய்பு.

ஏகாக்ரகமாயிருந்துபார்—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அன்னைசித்ரூபியின் வல்லமையுரைப்பேன்
மன்னனே நீர்கேளும்.

அனுபல்லவி.

பின்னம்இல்லாமலே போதமாய்நிகழ்ந்திடும்
சின்மயாநந்தமான தேவியின்மகிமையை (அ)

சரணங்கள்.

எல்லாம்அவள்செய்தாலும் ஒன்றும்செய்யாதவள்
எல்லாம்அறிந்தாலும் ஒன்றும்அறியாதவள்
எல்லாவற்றிற்கும் அவள் ஆதாரமானாலும்
எல்லையில்லாமல்எங்கும் ஏகமாய் இருப்பவள். (அ)

தந்தைதாய் இல்லாதவள் தானேஸஞ்சரிப்பவள்
சிந்தைக்குள்ளே சிறப்பாகவஸிப்பவள்
பெந்தங்கள் அற்றோர்க்கு ப்ரகாசமாய் இருப்பவள்
ஸந்ததமும் என்னுடன் ஸல்லாபம்செய்பவள். (அ)

என்னைப்போல் அவளுக்கு அநேகம்புத்திரிகளுண்டு
அன்பானஸகோதரி அநேகம்பேர் எனக்குண்டு
என்னைபோலவேயவாள் எல்லோர்க்கும் தோழியுண்டு
மன்னனேநானும் அவாள் கூடவஸிப்பதுண்டு. (அ)

---

விருத்தம்.

எந்தனுடதோழியான புத்தியின்புத்திரனுக்கு
இந்தவூர்தன்னில் எப்போதிளைப்படைந்திருக்கின்றனே
அந்தவேளையைத்தான்கண்டு அன்னையின் அருகில் சென்று
ஸந்தோஷமாக அஸ்தரன் ஸதானந்த நித்திரைசெய்வான் 1.

எட்டுச்சாண் உள்ளதான பட்டணம் தன்னைகார்க்க
மட்டற்றமகிமைபெற்ற பிராணனும் அந்தவேளை
திட்டமாய் அன்னகரை சிறப்புடன் கார்க்கவென்று
இஷ்டமாய் அவிடம்வந்து இருக்கின்றநேர்த்திகேளீர். 2.

---

ராகம்—சங்கராபரணம். **(27)** சாய்பு தாளம்.

ஒதுங்கி நின்றரெ நயனர்—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ப்ரித்தியனும் புறப்பட்டானே தெசத்வார
பட்டணம் தன்னைகார்க்க.

அனுபல்லவி.

ப்ரசாரனென்னும்பேர்கொண்ட ப்ராணனும் அந்தவேளை
நாசிகாஸ்தானமான வாசல்ரெண்டையும் கார்க்க. (ப்ர)

சரணங்கள்.

அஸ்த்ரனுடைய புத்ராளெல்லோரையும்போஷிப்பான்
உத்ஸாகத்துடன் இந்த் ஊரேன்கார்த்துரெக்ஷிப்பான்
அஸ்தியாங்கிஷகூட்டில் அன்பாயமர்ந்திருப்பான்
விஸ்தாரஉருவெடுத்து எங்கும்வ்யாபித்திருப்பான். (ப்ர)

இந்தநகரில்அவன் இல்லாதிருந்துவிட்டால்
அந்தஇடத்தில் ஒருபேரும் இருக்கமாட்டாள்
தந்துவில்கோர்த்ததும் மாலையறுந்துவிட்டால்
எந்தவிதமோ அதுபோல் அவன் இல்லாவிட்டால். (ப்ர)

---

விருத்தம்.

இப்படியாக அந்த ப்ராணனன்னகரம்தன்னை
செப்பவொண்ணாததான திறமையாய் கார்த்துவந்தான்
எப்பொழுதவ்வூர் எங்கும் பாழதாய் ஆய்விடுமோ
அப்போழுதவ்விடம் அனைவரேன் அழைத்துசெல்வான்.

---

ராகம்—செஞ்சுருட்டி. **(28)** ஆதிதாளம்.

மானேயிளம்மாமயிலே—என்றவர்ணமெட்டு.

அவ்வூர்பாழகிவிட்டால் ப்ராணனும்அப்பொழுது
அவிடம்விட்டேகிவிடுவான் அஸ்த்ரனுடன்
செவ்வையாய்வேர்நகரம்செல்வான். 1.

இனத்தார்எல்லோர்களேன் இன்பமாய்அழைத்துக்கொண்டு
மனமகிழ்ச்சியுடன்செல்வான் ப்ராணனும்
தினமும்ஓர்தேசங்கள் செல்வான். 2.

அனேகநகரங்கள்க்குஅதிபதியாகஅஸ்தரன்
அரசாக்ஷிசெய்துவந்தான் அப்பொழுது
அனேகதுயரத்துள்ளாழ்ந்தான் 3.

சுத்தபதிவிருதையின் புத்திரனாகஇருந்தும்
மெத்ததுயரம்அடைந்தான் அஸ்த்ரனும்அப்போ
சித்தம்சிதறியேநின்றான். 4.

என்னாலேஎப்பொழுதம் போஷிக்கப்பட்டிருந்தும்
என்தோழியின்சகாயம்இருந்தும் தினமும்அஸத்ரன்
துன்பத்தில்துளைந்திருந்தான் 5.

சபலேமகாஸனே என்றஇருதுஷ்டைகளே
சதம்என்றிருந்ததினுலே ஸந்ததமும்
கவலேயடைந்தான்மெம்மேலே. 6.

ஜ்வாலாமுகன் நிந்திய விருத்தன் என்றஇரு
அபலேமைந்தரையடைந்து, அஸ்தரனும்அப்போ
அவமானம்மிக அடைந்து. 7.

---

விருத்தம்.

என்னென்றுசொல்வேன்எந்தன் மன்னனேநானும் இப்போ
இன்னமும்ஐந்துமைந்தர் மனமென்னும்மன்னனுக்குண்டு
துன்பங்கள்செய்வதற்கு ஸ்வதந்திரம் அவர்கள்க்குண்டு
என்னிலங்களிலும்செல்ல ஏகாந்தவழியும்உண்டு.

---

ராகம்—சங்கராபணம். **(29)** ஆதிதாளம்.

என்னசொல்லுவேன் கண்ணன்செய்தஉபசாரம்—
என்ற வர்ணமெட்டு.

என்னசொல்லுவேன் மன்னன்அஸ்த்ரன்படும்பாட்டை
என்னசொல்லுவேன்
அன்பானமைந்தர்கள் ஐவர்கிரகமும்சென்று
துன்பக்கடலில்ஆழ்ந்து ஸ்வரூபநிலேமறந்த (எ)

சபலேஎன்னும்மனவி வசத்தினில் அகப்பட்டு
கவலேக்குள்ளாகி அஸ்த்ரன் காலம்கழிப்பதை நான் (எ)

மகாஸனேயின்ஏவுதலால் மானிலம்எங்கிலும்சுற்றி
அகத்தில்கவலேகொண்டு ஆபாஸமாய் இருப்பதை (எ)

ஜ்வாலாமுகனுடைய வஞ்சனேக்குள்ளகப்பட்டு
சவம்போலேயாகிஅஸ்தரன் சஞ்சலத்துள்ளானதைநான் (எ)

நிந்தியவ்ருத்தனுலே நிகிலததில்உள்ளோர்எல்லாம்
நிந்திக்கஅப்பொழுது சிந்தைதுயர்கொள்வதை நான் (எ)

துஷ்டபிதாவினுலும் துஷ்டமனேவியாலும்
துஷ்டமைந்தர்களாலும் கஷ்டத்துள்ளானதைநான் (எ)

விருத்தம்.

சிலகாலம்இவ்வாருக சென்றிடஅஸ்த்ரனப்போ
வலேயினில்சிக்கிக்கொண்ட கலேயதுபோலேமன்னன்
பலவாருய்துன்பம்கொண்டு பரிதாபமிகஅடைந்து
பலபலஇடங்கள்சென்று பாழ்வினேக்குள்ளாளுனே

---

மலடிவயற்று மகன்போலே—என்ற வர்ணமெட்டு.

ராகம்—திருபுகழ். (30) ஆதிதாளம்.

அரசனேவரிசையாய்கேழ்ப்பீரே இனி
பரநிலேதன்னிலேகளிப்பீரே இப்போ
திறமுடன்உரைப்பதைமறவாமல் உள்ளத்தில் தரிப்பீரே 1.
சிலவேளேநாடுகள் தனில்இருப்பான் அவன்
சிலவேளேகாடுகள் தனில்இருப்பான்
சிலவேளேசிந்திக்கஒண்ணுதஇடத்திலும் இருப்பானே 2.
இந்தவிதம்இவன்படும் துயரை எல்லாம்
சிந்தையில்புத்திநன்ருய் அறிந்து அவள்
எந்தநேரமும்க்கவலேக்குள்ளாகிஏக்கம் பிடித்தாளே 3.
துஷ்டர்களானஇவர்கள்சேர்க்கையாலே
கஷ்டத்துள்ளாளுள்மெம்மேலே அப்போ
நஷ்டமாய்யறிவிழந்தவர்களேபோலே நானும்மானேனெ
இவ்விதம்வெகுகாலம்கழித்தாளே புத்தி
ஒவ்வஒண்ணுதுயரால்விழித்தாளே அவள்
அவ்வேளேஎன்னுடன்ஆரும்அறியாமல் வந்தடுத்தாளே 5.
புத்தியைதனிமையில்கண்டேனே அப்போ
சித்தம்மகிழ்ந்துஆள்கொண்டேனே நான்
மெத்தவும்அவளுக்குசித்தத்தில்புக்தியை விண்டேனே 6.
புத்திரனும்மனதைவென்ருளே அவன்
புத்திரவர்க்கங்களே கொன்ருளே அப்போ
மெத்தசந்தோஷமாய்என்னுடன்வந்தவள் நின்ருளே 7.

அத்வைதநகரத்தை கண்டாளே புத்தி
சித்தத்தில்ஆனந்தம்கொண்டாளே அவள்
சித்துடன்கலந்து சின்மயஅன்னத்தை உண்டாளே 8.

ஆனந்தஸாகரத்தில்அழுழ்ந்தாளே புத்தி.
கானல்உலகம்என்றுநினைந்தாளே எங்கும்
ஞானப்ரகாசமாய்நிறைந்தாளே ஸுகம்அடைந்தாளே 9.

நாதனேநீரும் உம்தோழியை அறிந்து
வேதனையற்றுபோதாந்தநிலைதெரிந்து
பேதாபேதகம்அற்றுபேரின்பமாகவே இருப்பீரே 10.

ஆதரவாகஎன் அனுபவத்தை இப்போ
நாதனே நான்னுரைத்தேன் சுபத்தை நீரும்
மோதப்ரமோதம்உள்கொண்டுநன்றாக ஆராய்வீரிதை 11.

---

விருத்தம்.

மங்கையின்மொழியைக்கேட்டு மன்னனும் ப்ரமையடைந்து
அங்கங்கள்மிகத்துடித்து அரசனும் ஆர்ப்பரித்து
செங்கனல்போலேரெண்டு கண்களும்மிகச்சிவந்து
பொங்கியேகோபம்கொண்டு பூவையோடுரைக்கின்றாரே.

---

ராகம்—பிலகரி. **(31)** ஆதிதாளம்.

கூட்டிவரச்சொன்னார் அம்மணி—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

என்னகதைசொன்னாய் என்னிடம்

அனுபல்லவி.

முன்னும்பின்னும் அறியாதபாலனைப்
போல் எண்ணிஇப்போ. (எ)

சரணங்கள்.

அப்ஸரஸ்திரியின்னிடத்தில் உற்பத்தியானேன்என்றும்
அப்பொழுதுஎன்னிடத்தில் உரைத்துவிட்டு
இப்பொழுதுஎதும் அறியாதவேறோர்கதைசென்னாய்
ஒப்பும்படிசொன்னாலதை எப்படிஒப்புக்கொள்ளுவேன். (எ)

அந்தப்புரத்திலிருக்கும் அன்னையைத் தவிரவேரே
எந்ததிக்கிலும் எனக்கோர் அன்னையுமில்லை
சிந்தைக்குவிரோதமான தோழியும்எனக்குஇல்லை
விந்தையாய் இருக்குதிப்போ உந்தனுடமொழிஎல்லாம். (எ)

வந்தியபுத்திரன்ஒருவன் சுத்திகவெள்ளிப்பணியை
மந்தகாசமாகஅதை வாங்கியணிந்து
கெந்தர்வநகரங்களை கெம்பீர்யமாகஜெயித்து
சிந்தைமகிழ்ந்து ஸொப்பனஸ்திரியைமணந்தான் என்றுப்
[போல். (எ)

உந்தனுடமொழிதன்னை எந்தவிதம்அறிந்தெந்தன்
சிந்தைதுயர்தீர்ப்பேனென்று வேந்தனும்கேழ்க்க
அந்தவேளைதன்னில் ஹேமலேகையும்வாய்துறந்து
மந்தகாசமாகவே மன்னனுடன்உரைப்பாள்பதில்

---

பல்லவிபோல்.

கேளும்மகாராஜனேநீரும் க்லேசங்களெல்லாம்
ஒழிந்தென்னும் அழிவில்லாபதம். (கே)

---

விருத்தம்.

நாதனேசொல்லக்கேளீர் நானுரைசெய்வதெல்லாம்
சூதானமொழிசொல்வாரோ சுத்தமாம்நிலைபெற்றோர்கள்
வேதனைஎல்லாம்தீர விரைவுடன்உமக்கிப்போது
வேதவேதாந்தம்எல்லாம் விளம்புவேன்கேளீர்என்றாள்.

---

ராகம்—தோடி. **(32)** ஆதிதாளம்.

ஏமனிபுகாடிஸ—என்றவர்ணமெட்டு.

பல்லவி.

அன்புடன் கேளும் என் மன்னனே நீரும்.

அனுபல்லவி.

சொன்னவைகளை எல்லாம்
சிந்தையில் ஆலோஜித்து. (அ)

சரணங்கள்.

சிரத்தையுடனிருந்து ஒத்துகொள்வீர்இதை
அசிரத்தையுடன்னிருந்தால் அனுபவம்எப்படியுண்டாகும்
சிரத்தையேச்ரேயஸுக்கு காரணமாய்இருப்பதால் (அ)

தாயின்னிடத்தினில்விச்வாஸமில்லாதசேய்க்கி
ஓயாதுயரம்மன்றிஒருபொழுதிலும்ஸுகமுண்டோ
நேயர்மொழியில்ப்ரேமைஇல்லார்க்கு ஞானமுண்டோ (அ)

பத்தினிஇடத்தினில்நம்பிக்கைஇல்லாதவர்க்கு
சித்தத்தில்துன்பம்மன்றி இன்பம் ஒருபோதும்உண்டோ
நிந்தியமும்இதைஎல்லாம் சிந்தனைசெய்யாதேன்கொண்
[டோ (அ)

அனுவஸ்தாதோஷத்தினல்கன துன்பம்மேலிடும்
தினமும்நீர்இதையெல்லாம் சிந்தையில்லுணர்ந்திடும்
சினத்தைஒழித்துநீரும் ச்ரத்தையுடனே இருந்து (அ)

---

விருத்தம்.

அரிவையின்மொழியைக்கேட்டு அரசனும்ப்ரமயைவிட்டு
அறிவினில்சிறந்திருக்கும் ஆரணங்கருகில்சென்று
பரிவுடன் அவளைபார்த்து பரமஸந்தோஷம்கொண்டு
தெரிந்திடும்படிஎனக்கு ஸ்வரூபநிலையுரைஎன்றுரே

---

ராகம்—காம்போதி. **(33)** சாய்பு—தாளம்.

பேசவேணும்மாலுல் பேரின்பம் தன்னைபேசு—என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அன்பர்க்குகந்தஎன் ஆரணங்கேஉந்தன் மகிமை
யாருடன்சொல்வேன்

அநுபல்லவி.

சின்மயாநிலைபெற்றஉந்தன்கூட இருந்தும்
இன்னுள்பரியந்தம்நான் அறியாமல் போனேனே. (அ)

சரணங்கள்.

சிரத்தையேஸர்வத்திர்க்கும் காரணம்என்றுரைத்தாய்
சிரத்தையேச்ரேயஸுக்கிருப்பிடம் என்றுரைத்தாய்
சிரத்தையேசிதானந்தநிலைதரும் என்றுரைத்தாய்
சிரத்தைஇல்லாதவர்க்கு சிக்காதுஎன்றுரைத்தாய். (அ)

ஆகமசாஸ்திரங்கள் அனேகவிதம்இருக்க
ஏகமாய்அறிந்தெந்தன் கேதம்தவிர்ந்திருக்க
வேகமாய்இவையெல்லாம் எனக்குவிரித்துரைக்க
ஊகத்துடன்அறிந்தென் னுள்ளம்மகிழ்ந்திருக்க. (அ)

மோகம்மற்றதேமுக்தி என்றுரைக்கிறார்சிலர்
ஆகமம்காணுஅதீதம் என்கிறார்சிலர்
தேகமேபிர்ம்மமென்றுரைக்குகிறார்சிலர்
ஸோகம்ஸொரூபம்மென்றுசொல்லுகிறார்சிலர். (அ)

கொள்வதேதென்றறியேன் தள்வதேதென்றறியேன்
துள்ளும்மனக்குரங்கை துலைக்கும்வழியரியேன்
உள்ளத்தில்உதித்திடும் ஸந்தேகங்களை எல்லாம்
எள்ளளவும் இல்லாமல் எந்தனையாள்கொள்வாய். (அ)

---

விருத்தம்.

இவ்விதம்ஹேமச்சூடன் இயம்பியமொழியை எல்லாம்
செவ்வையாய்க்கேட்டு ஹேமலேகையும்மனம்மகிழ்ந்து
ஓவ்வவேஉபநிஷத்தில் உரைத்திடும்மொழியை எல்லாம்
அவ்வேளைஅரசனுக்கு அரைந்திடலுற்றாள்மாது.

---

ராகம்—செஞ்சுருட்டி. **(34)** ஆதிதாளம்.

அன்னே பின்னே—என்ற வர்ணமெட்டு.

மன்னனுரைத்தமொழியை மங்கைஹேமலேகைகேட்டு
இன்பமுடனேஅவர்க்கு உரைப்பாள்பதில்
அன்பனேநான் சொல்லுவதை ஆதரவுடனேநீரும்
அன்னியசிந்தனை இல்லாமல் அன்புடன்கேளும். 1.

மனதானது குரங்குஸ்வபாவமாகவேஇந்த
மானிலங்களெங்கிலும் ஓடிக்கொண்டிருக்கும்
மனதின்சலனத்தினால் மகத்தானதுயர்கொண்டு
மானிலத்தில் அநேகர் மயங்கித்திரிவாள். 2.

மனமிழந்தஇடத்தில் மகத்தானஸுகமுண்டு
மன்னனேநீர் சுஷுப்தியில் அறிந்துகொள்ளும்
கனதுயரைவிளக்கு மனதையடக்கிவிட்டால்
மலினமற்றநிலையில் மகிழ்ந்திருப்பீர். 3.

ஸாதனங்கள்நாலடைந்து ஸத்தானதர்க்கத்தைக்கொண்டு
ஸந்ததமும் தத்துவத்தை சோதனைசெய்வீர்
பேதவாதத்தையொழித்து போதம்தான் என்றறிந்து
பேசஇரண்டற்றநிலை தன்னில்இருப்பீர். 4.

தீரபுத்தியாய்இருந்து நேராக ஆராய்ந்துபார்த்தால்
மாறாதஆனந்தம் மன்னனேஉண்டாம்
பாராதிஅண்டமெல்லாம் பரத்தில்உதித்ததென்று
பரிவுடன்அறிந்துஉந்தன் ப்ரமைஒழிப்பீர். 5.

பத்தினிபுத்திரர்தனம் மித்தையிதென்றறிந்து
நித்தியானந்தம்கொண்டு நிலைத்திருப்பீர்
எத்திசைகளும்நிறைந்த சித்ஸொரூபம்தானேஎன்று
சித்தப்ரமைஅற்றுநீரும் செழித்திருப்பீர் 6.

மாயாமயமாயிருக்கும் மானிலபோகங்களெல்லாம்
மகேசனால்ஆளித்ததென்றறிந்துகொள்ளும்
ஓயாதுயரமானகாயம் பொய்யென்றறிந்து
கைவல்யபதம்பெற்று களித்திருப்பீர். 7.

பக்தியுடனேதினமும் நித்தியனைபூஜைசெய்தால்
சித்தவிகல்பங்களெல்லாம் சிதறும்படி
யுக்தியைபுகட்டிவுமக்குருதிநிலையுரைத்து
முக்திபதத்தை அப்போதளித்திடுவார். 8.

நிஷ்காமமாய் ஈசனை நித்யமும்பூஜைசெய்தால்
நிகிலப்ரமைகள்எல்லாம் நீங்கிவிடும்
துஷ்டஜென்மத்தைதஒழித்து ஸ்வரூபநிலையறிந்து
துரியஆதிதனிலைதன்னிலிருப்பீர். 9.

பரமபக்தியுடனேபரமனைபோற்றிசெய்தால்
ப்ராரப்த்தகர்மம்கூட பரந்துவிடும்
மரலிதன்னைஜெபித்து மிருகண்டுவின்தனயனும்
யிரக்காமலிருப்பதை அறிந்திலீரோ. 10.

இந்தவிதம்ஹேமலேகை இயம்பியமொழிதன்னை
சிந்தையிலறிந்துராஜன் செப்புவார்பின்னே
இந்தஉலகில்அனேகமூர்த்திகள் இருக்கஅதனை
எந்தவிதம்அறிந்து உபாசிப்பேன்பின்னே. 11.

ஸர்வபரிபூரணனாய் ஸர்வஜெகத்காரணனாய்
ஸர்வஸுதந்திரனாக இருக்கும்மூர்த்தியை
ஸர்வஸந்தேகமும் மறதயவுடனேஎனக்கு
ஸர்வமும்எடுத்திப்போ உரைத்திடுவாய். 12.

---

விருத்தம்.

இம்மொழிதன்னைக்கேட்டு ஹேமலேகையும்மகிழ்ந்து
கம்மலற்றிருக்கும்மீசன் கருணையாம்மதுவையுண்டு
நிம்மதியாகவேந்தன் நிகழ்ந்திடவேண்டும்மென்று
கெம்பீர்யமாகஅப்போ கேளுமென்றுரைக்கின்றாளே.

---

ராகம்—நாதநாமக்ரியை. **(35)** ஆதிதாளம்.

நினைப்பதெப்போதுநெஞ்சே—என்றவர்ணமெட்டு.

பல்லவி.

சொல்லுறேன் கேளும்மன்னா ஸொரூபநிலையை

அனுபல்லவி.

அல்லல்தவிர்ந்திருக்கும் ஆத்மாநிலையைஉய்து
தொல்லைசெய்யும்மாயயை இல்லாமலேகொய்து. (சொ)

சரணங்கள்.

நாதனேஉமக்குநான் ஈசன்ஸொரூபம்தன்னை
பேதமரஉரைப்பேன் கேளும்சிரத்தையுடனே. 1.

வைஷ்ணவரானவர்கள் விஷ்ணுவேகர்த்தாவென்றும்
சைவர்கள்ளானவர்கள் சம்புவேகர்த்தாவென்றும். 2.
அவரவர்புத்திக்கி ஆனபடிக்கெல்லாம்

அவனியில்உள்ளவர் அர்த்தம்செய்துகொள்வாள். 3.
உபாதானகாரணம் ஒன்றும்இல்லாமல்தாணுய்
சுபாசுபங்களெல்லாம் உலகினில்சிருஷ்டித்தார். 4.

ஆதலால்அவருக்கு அவயவங்கள் இல்லைஎன்றும்
போதஸெரூபமானோர்சொல்லும்மொழிஇதென்றும். 5.
கண்ணாடியில்தோன்றும் பிரதிபிம்பம்போலவே

உன்னுவோர்புத்திக்கி தகுந்தபடியாய்தோன்றும் 6.
ஸ்தூலபுத்தியுள்ளோர்க்கு ஸ்தூலமாகவேதோன்றும்
மேலாம்பதம்பெற்றோர்க்கு மெய்ப்பொருளாகத்தோன்
[றும். 7.

ஆதலிஞலீசனை சேதனன்என்றறிந்து
பேதம்அகன்றுநீரும் பூஜைசெய்வீருகந்து. 8.
பின்னமில்லாதிருக்கும்அறிவுள்ளோர்புத்திக்கி
பின்னமாகவேதோன்றும் அறிவற்றோர்புத்திக்கி. 9.
எப்படிஎன்றுகேட்டால் ஒப்பும்படியுமக்கு
இப்போதொருதிருஷ்டாந்தம் இரைவனேசொல்லுகி
[றேன் 10.

ஆகாசம்அகண்டமாய் அசைவற்றிருந்திட்டாலும்
மேகாகாசம்மகாகாசம்என்றுரைப்பதுபோலும். 11.

நிஷ்களங்கமானதோர் பரத்தையுபாஸித்து நீர்
அக்ஷயானந்தத்தில் அரசே அமர்ந்திருப்பீர். 12.

விருத்தம்.

பிரியையின்மொழியைஎல்லாம் ப்ரேமையாய்கேட்டுவேந்தன்
திருபுரையின்உருவம்தன்னை சிறப்புடன்அறிந்துகொண்டு
துரியமாம்நிலையில்தானும் ஸுகமுடன் இருக்கவென்று
பரிவுடன்சித்ஸொரூபிதன்னை பக்தியாய்பூஜைசெய்தான்

---

ராகம்—தோடி. **(36)** சாய்புதாளம்.

காமாக்ஷிஎழுந்தருளினாள்—என்றவர்ணமெட்டு.

பல்லவி

பூஜைசெய்தானேராஜன் போதஸ்வரூபிதன்னை
பூஜைசெய்தானேராஜன்

அனுபல்லவி.

ஆசைஎன்றும்பெரும் பிசாசைஎல்லாம்துரத்தி
மாசற்றஸொரூபத்தில் மனதைநன்றாய்இருத்தி (பூ)

சரணங்கள்.

குருவின்அனுக்ரகத்தால் குறிப்பாய்மந்தரமறிந்து
திருபுரையின் ஸ்வரூபத்தை திரமுடனேதெரிந்து
ஒருநினைவும்இல்லாமல் ஒன்றாய்மனம்பிரந்து
ஹ்ருதயத்தில்இணையில்லா பக்திமிகச் சிறந்து (பூ)
இந்திரியவர்த்தகர் வியாபாரம் இல்லாமல்செய்து
சிந்தையில்துயர்அற்று ஸ்வரூபநிலையைஉய்து
நிந்தைனையான இந்த நிகிலப்ரமையைகொய்து
ஸந்ததமும்ஸவிகல்ப்ப ஸமாதியைசெய்து (பூ)
இவ்விதமாகசில காலங்கள்சென்றிடவே
அவ்வேளையினில்தேவி கருணையும்மீறிடவே
கவ்வும்ராகாதிகள்வர் எல்லாம்மாய்ந்திடவே
ஒவ்வொண்ணானந்தமாய் உள்ளம்மகிழ்ந்திடவே (பூ)

---

விருத்தம்.

அரசனும்இவ்வாருக அனேகநாள்கழிந்தபின்பு
ஒருதினம்தன்னில்ஹேமலேகைபின்கிரகத்தில்செல்ல
அரசனின்வரவைக்கண்டு ஆரணங்கெழுந்துசென்று
வருகவென்றுரைத்தப்போது வகையுடன்உபசரித்தாள்

---

**(37)** சாய்பு தாளம்.

வங்காரமார்பிலணி—என்ற திருப்புகழ்மெட்டு.

மன்னன்வரவு தன்னை மங்கைஹேமலெலைகைக்கண்டு
அன்புடனேப்ரதக்ஷணவந்தனுதிகள்சைய்துநின்முள்
இன்பமுடனே அப்போஇறைவன் தன்னைபார்த்தோர்மொழி
உரைப்பாளே. 1.

அன்பனேஇன்னுள்வரையும் எவ்விடத்தில் சென்றிருந்தீர்
என்னைவிட்டுஅதற்குமுன்னிமைபொழுதுஇருந்திலீரே
இன்றைக்குஇவ்விடத்தில்விரைவுடனேவந்ததென்னு
உரைப்பீரே. 2.

இந்தவிதம்சோதனைகள்செய்வதினிபோருமிப்போ
உந்தனுடன்க்ரீடைசெய்துஉகந்திருக்கவந்ததன்று
சிந்தையினில்எழுந்தசிலஸந்தேகங்கள் கேழ்பதற்காய்
வந்தேன்நான். 3.

முன்னொருக்கால்எந்தனுக்கோர்சரிதையை நீயுரைத்தாய்
அன்றோ
இன்றெனக்குவிளங்கும்படிஅதனை இப்போ எடுத்துரைப்பாய்
உன்னையேசரணமாக அடைந்திருக்கும்எந்தனுக்கு
இப்போது. 4.

இம்மொழியைக்கேட்டுஹேமலேகையும்மிகமகிழ்ந்து
அம்பிகையாள்அனுக்கிரகத்தினுலே அன்ருேவேந்தனுக்கு
நம்மொழியில்இவர்க்குநல்லநம்பிக்கை ஜெனித்ததென்று
நினைந்தாளே. 5.

பக்குவகாலம்இதென்றுமிக்கவும்மனதிலெண்ணி
முக்கியமாய்முதல்வனுக்குமுக்திநிலையுரைக்கநண்ணி
தக்கநல்லசமயம்என்றுதத்துவங்களையெடுத்து(உரைப்பாளே)

---

விருத்தம்.

ஈசனின்கிருபையினாலே இறைவனேஉமக்கிப்போது
மோசம்இவ்வுலகம்என்றும்முக்திவேர்ஒன்றுண்டென்றும்
நேசனேநினைத்துநீரும் என்னிடம்கேட்டதாலே
மாசற்றநிலையுரைப்பேன் மன்னனேகேளும்என்றாள்

---

ராகம்—நொண்டிசிந்து. **(38)** ஆதிதாளம்.

மாதவர்குலத்துதித்தா—என்றவர்ணமெட்டு.

மன்னனேசொல்லுரேன்கேளும் நீரும்
என்னாளும்அழியாஎன்சரிதைதன்னை
சித்தைஅன்னைஎன்றுரைத்தேன் ராஜே
புத்தியைத்தான்தோழி என்றுரைத்தேன்
அவித்தையைஅசதிஎன்றேன் ராஜே
அவளேபுத்தியைவசம்கொண்டாள்என்றேன்
மோகத்தைப்பதிஎன்றேன் புத்திக்கி
மகனாகமனதையேஉரைத்தேன்அப்போ
ஆசையைபத்தினிஎன்றேன் மனதிர்க்கு
நேசமாய்ஞானேந்திரியத்தைபுத்திரன் என்றேன்
ச்ரோத்திராதிகளையேவீடென்றேன் அவர்கள்க்கு
ப்ரபஞ்சவிஷயங்களைபோகம்என்றேன்
காப்பனையைசக்களத்திஎன்றேன் அவளுக்கு
அர்ப்புதக்ரோதலோபத்தைபுத்திரன்என்றேன்
புரம்என்றதும்சரீரமே ராஜே
ப்ரசாரன்என்றதுவும்ப்ராணனையே
நரகங்களையேகாடென்றேன் ராஜே

பாநிலேயடைவதையேவீடென்றேன்
சித்தின்னுணாவையேநான் ராஜே
புத்திக்கிஉபதேசம்செய்தேன்என்றேன்
என்னுடன்சேர்வதுஸமாதி ராஜே
என்னுடதாயாருடனேசேர்வதுமோக்ஷம்
இதனைதான்என்தனுடைய அர்ப்புத
கதையாகஉமக்குநான்விரித்துரைத்தேன்
இந்தவிதம்மாகவேநீரும் ராஜே
சிந்தனைசெய்துபார்த்தீரானல்
பெந்தங்கள்யாவும்ஒழிந்து ராஜே
ஸொந்தமாம்தன்னிலேதன்னிலிருப்பீர்

---

விருத்தம்.

தத்துவார்த்தங்களெல்லாம் சாற்றவேஹேமலேகை
அத்தனையுங்கேட்டுராஜன் அகத்திலானந்தம்கொண்டு
சித்தவிச்ராந்தியாகி சிறப்புடன்அவளைபார்த்து
மெத்தசந்தோஷமாக மெல்லியோடுரைக்கின்றாரே

---

ராகம்—காப்பி. **(39)** ரூபகதாளம்.

எனக்கு நீ இரங்காவேணும்—என்றவர்ணமெட்டு.

பல்லவி.

அன்பே நீ தன்யையாஇருக்கின்றாய் ஆனந்தமாகவே

அனுபல்லவி.

உன்னுடையாஞானத்தின் உருதியையாருடன்சொல்வேன்
என்னென்றுவர்ணிப்பேன்அதைஅன்னமேஇவ்வதிசியத்தை
(அ)

சரணங்கள்.

கையிலாமலகம்போலே உய்யும்வழியையுரைத்தாய்
வையகம்பொய்யென்றுரைத்தென்ஐயங்கள்எல்லாம்தவுர்த்
தாய்

பரசித்தான அன்னையார் அதை எனக்கன்பாய்புரைக்காய்
திரமுடன்என்நிலை தன்னில் சிந்தைமகிழ்ந்திருக்க (அ)
இம்மொழியைக்கேட்டுமாது தம்முள்ளானந்தம்அப்போது
மெய்மேலும்மாதீகம்கொண்டு நிம்மதியாகவேவிண்டு (ம)

பல்லவிபோல்.

மங்கையும்உரைக்கலுற்றாளே மன்னனிடத்தில் (ம)
நாதனேநான்உரைப்பதை ஆதரவாகவேகேளும்
பேதமெல்லாம்மகற்றிபோதம்மாகஎன்னாளும் (ம)
பகிர்முகதிருஷ்டிகள்ளற்றுஅந்தர்முகதிருஷ்டியைபெற்று
அகிதம்உலகம்என்றும்ஸாகிர்தம்தன்ஸ்வரூபம்மென்றும் (ம)
ஆத்மஸ்வரூபமான அன்னையை அறிந்தீரானால்
சாற்றவொண்ணாதசுத்தசைதன்னியம்தான் ஆவீர்சொன்னேன்
ஏகாந்தமாயிருந்து ஆராய்ந்துபார்த்தீரானால் (ம)
மோகாந்தகாரம்மற்றுமுத்திநிலையடைவீர்
திருச்யவிஷயந்தன்னில்சிந்தைமகிழ்ந்திடாது
திருக்காய்இருக்கும்சுத்தஸ்வரூபநிலைவிடாது

விருத்தம்.

இன்னமும்சொல்வேன்கேளும்இறைவனேஉமக்குஇப்போது
சூன்னமாய்இருக்கும்இந்த குவலயவாழ்க்கைஎல்லாம்
அன்னியமாகத்தள்ளி ஆனந்தவடிவம்மாக
உன்னிதமாய்இருக்கும்உபநிஷத்வாக்கியந்தன்னை

ராகம்—நாதநாமகிரியை. **(40)** ஆதிதாளம்.

ஸமாதியோகம்ஸாதனேபாலே—என்றவர்ணமெட்டு.

பல்லவி.

அரசனேநான்உரைக்கும்மொழியை அன்பாய்கேழ்ப்பீரே

அனுபல்லவி.

பரநிலையில்பதித்துஇருந்துநீர்ப்ரமையாவும்ஒழிப்பீரே ராஜே

சரணங்கள்.

பிபீலிகாதிஸ்தம்ப பரியந்தம்சைதன்யம்ஒன்றே
எப்போதும்ஏகாந்தம்மாக இருந்துநீர்
ஒப்பற்றிருப்பீரே ராஜே 1.

மேகத்தினால்மறைபட்டுஇருந்திடும்பாஸ்கரன்போலவே
மோகத்தினாலயேஏகத்தைநன்றாய்
அறியாமலானதுவே ராஜே 2.

நிர்மலபுத்தியினாலேநீரும்நன்றாய்அறிவீரே
கர்மமென்னும்பெரும்கட்டை அவுழ்துநீர்
பிர்ம்மமாய்ஆவீரே ராஜே 3.

புத்தியால்ஆத்மாவை அறியலாம்என்றாலது
பரிச்சேதம்ஆமோவென்று
சித்தத்தில்பிரமைகொண்டுகேழ்ப்பீரானால்
யுக்திஒன்றுரைப்பேனே ராஜே 4.

எப்படிஎன்றால்ஒப்பும்படிக்கி
இப்போதுஉரைப்பேனே
எப்பொருளிலும்வியாபித்திருக்கும்வஸ்து
எப்போதும்ஏகம் தானே ராஜே 5.

சூரியப்பிரகாசமெங்கிலும்மாக இருந்தாலும்சுவரில்
காரியமாய்அதிகமாய் இருப்பதுபோல்
மீரிபுத்தியில் தோன்றும்மாத்மா ராஜே 6.

ப்ரமாணாந்தரத்தால் பிரமத்தைநிரூபிகரிப்போம்என்றாக்கால்
ப்ரமாணங்களுக்குள்ளகப்படாதிருக்கும்
அபரிசின்னனன்றோ ஆத்மா 7.

ஆத்மாவைஅறியும்படிகாண்பிஎன்பதுஎப்படிஇருக்கென்றால்
நேத்திரத்தைஒருவன்காணும்படிஎனக்கு
காண்பிப்பாய்என்றாப்போல் ராஜே 8.

முக்திவழியைகுருசிஷ்யனுக்கரியகாட்டுவார் அல்லாமல்
எத்திசையும்நிறைந்தவஸ்துஇந்தாவென்று
அளிப்பாரோகையில். ராஜே 9.

அவ்வழியைநான்சொல்லுகிறேன் நீரும்
செவ்வையாய்க்கேழ்ப்பீரே
ஒவ்வவொண்ணுதஆனந்தமுள்கொண்டு
எவ்வேளையும்இருப்பீரே ராஜே 10.

என்னுடையதுஎன்றுஎவைகாண்கிறீரோ
அதெல்லாம்தானன்று
உன்னஒண்ணுமல்உயர்உற்றிருப்பது
தானேதாகும் ராஜே 11.

இவைகளெல்லாம்ஏகாந்தமான
இடத்தில்போய்யறிவீரே
அவையடக்கத்துடனே இருந்துநீர்
ஆராய்ந்துபாப்பீரே ராஜே 12.

---

விருத்தம்.

இப்படிபிரியைசொன்ன மொழிதன்னைக்கேட்டுவேந்தன்
அப்பொழுதவிடம்விட்டு அன்புடன்எழுந்திருந்து
புரவியின்மீதில்ஏறி நகறத்தின்புறத்தைநோக்கி
பரபரப்புடனேவேந்தன் உத்தியானத்திற்குள்சென்றார்.

---

ராகம்—நாதநாமகிரியை. **(41)** ஆதிதாளம்.

எத்தனைதூரமோ பண்டாரி பூரம்மரியேன்—என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

ஏகாந்தமாய்இருந்து ஆராய்ந்துபார்க்கவென்று
வேகமுடனேவேந்தன் மேடையின்மேல்சென்று
பரிஜாரர்களைஎல்லாம் பரிவுடன்போகச்சொல்லி
பொறிபுலன்களைஎல்லாம் போதக்கத்தியால்தல்லி.

த்வாரபாலாளிடத்தில் தன்னபிப்ராயசொன்னார்
எவர்கள்வந்தாலும்இதின் உள்ளேவிடாதேஎன்றார்
உப்பரிகைபில்சென்று ஒப்பற்றனந்தம்கொண்டு
எப்பொருள்களேன்கண்டு நிர்ப்பயமாகநின்று

அர்ப்புதமான ஒரு ஆஸனத்தில்இருந்து
கர்ப்பனைசெய்யும் மனதையடக்கிச்சிரந்து
மனம்த்ரிடப்படுத்தி மகதத்வம்முதலாக
அனவரதமும்அவர் ஆராய்ந்துகொண்டிருந்தார்
இப்ரபஞ்சவாழ்க்கைகள் ஸொப்பனம்போலேஎன்று
எப்பவும்வஸ்துவை விசாரணைசெய்யலுற்றார்
தனதான்யஸம்பத்தெல்லாம் தனதல்லாஎன்றறிந்தார்
இனமானதன்னிலேயை தினமும்நினைந்திருந்தார்.

---

விருத்தம்.

ஏகாந்தமாகராஜன் இருந்தவர்பார்க்கும்போது
தேகமேபிர்ம்மமென்று சிந்தையில்தெளிந்தப்போ
சோகத்தைவிளைக்கும்இந்த தேகம்தானுவோவென்று
வேகமாய்வேந்தன்பின்னும் விஜாரணைசெய்யலுற்றார்.

---

ராகம்—முகாரி **(42)** சாய்பு தாளம்.

கனவோ நினைவோ—என்றவர்ணமெட்டு.

கண்ணிகள்.

சுக்கிலச்ரோணிதம் நிறைந்த இப்போக்கிஷத்தை
திக்கென்றுபோகும் மிந்த ஸ்திரமற்ற தேகத்தை. 1.
தானல்லஎன்றறிந்து ஊனைவேறாய்கழித்தார்
தானாகும்ஸ்வரூபம் அறியாமலேவிழித்தார். 2.
ப்ராணாதிமுதலபஞ்ச வாயுவும்தான்னல்ல
ப்ரமையைவிளைக்கும்மனம் புத்தியும்தானல்லா. 3.

சுஷுப்தியில்தோன்றும்சூன்னியம்' தானல்லாஎன்றறிந்தார்
செழிப்புற்றவஸ்துவை அறியாமலேகுலைந்தார் 4.

என்னைவிளக்கும்வஸ்து ஏதென்றுஎனக்கிப்போ
நன்றாய்நான்அறியாமல் போனதும்ஏதோஇப்போ 5.

பலவிஷயங்களினில் பற்றுதல்லிருப்பதால்
துலக்கமாய்வஸ்துவும் அறியாமலிருக்குமானால் 6.

அவைகளைஎல்லாம் அகற்றியேநானினி
தவமுடன் தன்னிலையை அறியவென்றவருன்னி 7.

மனதைதிடப்படுத்தி மன்னனும்பார்த்திடவே
கனத்தஇருள்வந்துஅவிடத்திலடர்ந்திட 8.

இதுவேஆத்மஸொரூபம் என்றரசன்நினைந்து
குதூகலத்துடன்பின்னும் சிந்தனைக்குள்சிரந்து 9.

பின்னொருஸமயத்தில் ப்ரகாசமாய்வீசகண்டார்
இன்னதென்றறியாமல் வேந்தன்கவலைகொண்டார் 10.

பலபலவிதமாக பரமாத்மாதோன்றுதே
நிலையாகக்காணாமல் என்சிந்தையும்வேகுதே 11.

பின்னையும்மனதை இறைவன்அடக்கிபார்க்க
அன்னேரம்அரசன்மனமும் நித்ரையைஓர்க்க 12.

நித்ரையில்அனேக விசித்திரங்களையும்கண்டார்
சித்தம்தெளிந்துராஜன் ஆலோஜனையுங்கொண்டார் 13.

நித்திரையில்கண்ட கனவுபொய்யாதல்போலே
அத்தினம்கண்டஇருள் ஒளியும்பொய்ஆதலாலே 14.

மனதின்சலனமன்றோ ஸொப்பனமானதின்று
மனதின்சலனமற்று மகிழ்ந்திருப்பதுஎன்று 15.

---

விருத்தம்.

இன்னமும்மனதைநன்றாய் நிக்ரகம்செய்துபார்ப்போம்
என்றுமன்னனும்நினைத்து ஏகாக்ரசித்தமாகி
அன்னியம்மாகிடாமல் அசைவற்றிருக்கும்போது
அன்னேரம்தன்னில்வேந்தன் ஆனந்தம்மாகநின்றான்.

---

ராகம்—செஞ்சுருட்டி. **(43)** சாய்புதாளம்—திருப்புகழ்.

சரணகமலாலயத்தில்—என்றவர்ணமெட்டு.

இப்படியாகஇறைவன் இருந்திடவேஅப்பொழுது
திக்ப்பிரமைகொண்டவர்போலே விழித்தாரே 1.

ஸொப்பனமோ அல்லால் மனக்கர்ப்பனையோஇதுவும்என்று
எப்பொழுதும்சிந்தைதளர்ந் திருந்தாரே 2.

சுஷுப்தியைப்போல்மனம்மிறந்து தோற்றமற்றிருக்கும் [போது
செழிப்புடன்இஸ்ஸுகம் உதித்ததேதோ 3.

காரணத்தையன்றி ஒருகாரியமில்லாததாலே
காரணத்தை கண்டிருப்ப தெப்போ 4.

சிலவேளையில்இருள் ஆகவும் சிலவேளைஒளியாகவும்
சிலவேளைசிந்திக்கவொண்ணு ஸுகமாயும் 5.

பிரிவாகதோன்றுவதெல்லாம் பிர்ம்மமாமோஎன்றவர்தன்
பிரியைஇடம் கேழ்ப்போமென்று நினைத்தாரே 6.

ஹேமசூடன்எழுந்திருந்து துவாரபாலாள்இடத்தில்சென்று
ஹேமலேகையைஅழைத்து வாவென்றார் 7.

அரசன்உரைத்தமொழியைஅன்புடனே கேட்டுகந்து
விரைவுடன்சென்றறிவையிடம் உரைத்தானே 8.

சேவுகனுரைத்தமொழி தேன்மொழியாள்கேட்டபோது
காவலன்இருக்கும்இடம் சென்றாளே 9.

நாதன்இருக்கும்மேடையில் நாயகியாள்ஏறிசென்று
பேதம்மரஅவராருகில் இருந்தாளே 10.

கண்களை திறந்தரசன்களிப்புடனேபார்க்கும்போது
பெண்மணியாள் அருகிருக்க கண்டாரே 11.

மன்னனேநீரென்னை இப்போ இவ்விடத்தில்ஏகும்படி
சொன்னதின்காரணம்என்ன உரைப்பீரே 12.

தேகத்திற்கேதாவதுஉபாதி இப்போஉமக்குஉண்டோ
வேகமாய்என்னையழைத்தா தென்கொண்டோ 13.

பாவையவள்கேட்டுவிட்டு பரிவுடனேஇருந்திடவே
காவலனும்அதிற்குப்பதில் உரைப்பாரே 14.

---

விருத்தம்.

மங்கயேநீ தான்சொன்ன மகத்தானமொழியைக்கேட்டு
இங்குநான் இருந்துகொண்டு ஏகாந்தமாகபார்த்தேன்
அங்கமில்லாதான ஆத்மாவைக்காணேனம்மா
சங்கைகள் மிகுதியாகிசஞ்சலத்துள்ளேயானேன்.

---

ராகம்—ஹிந்துஸ்தான் தோடி. **(44)** ஆதிதாளம்.

ஐயாபழனிமலைவேலா—என்றவர்ணமெட்டு.

தையலேஉன்மொழியைகேட்டு நானும்
தத்துவசோதனைக்குள்பட்டு
வையகத்துவாஞ்சையைவிட்டு பார்க்க
வஸ்துஅனேகமாய்தென்பட்டு (தை)
சிந்தை துயர்மிகஅடைந்தேன் அந்த
ஸந்தேகம்கேழ்க்க இங்கழைத்தேன்
ஸொந்தமுடன் நீயும்கேட்டு எந்தன்
ஸந்தாபம்யாவையும்ஓட்டு (தை)
என்னகாரணத்தினாலோ நானும்
என்னிலையறியாமலானேன்
முன்னாளில் செய்தவினைதானோ வஸ்து
இன்னேரம் விளங்காதமேதேனோ (தை)

சித்தநிரோதனம்செய்து நானும்
சித்தையாராய்ந்துபார்த்தேன்
எத்தனையோவிதம்மாகத் தோன்ற
மெத்ததுயரத்துள்ளாழ்ந்தேன் (தை)
அனேகவிதம்மாகதோன்றும் அவை
எல்லாம் ஆத்துமாவாய்யாமோ
எனதுஸந்தேகங்கள்தீர நீயும்
களிப்புடன்உரைத்திடாய்சிராய் (தை)
இவ்விதம் வேந்தனும் கேழ்க்க ஹேம
லேகையும்சொல்வாள்ராஜன் ஓர்க்க
செவ்வையுடனேகேளும் என்று
தேன்மொழியாளும் நின்று (தை)

---

விருத்தம்.

அரசனே நீரும்மிப்போ அன்புடன்மனமடக்கி
பரநிலைதனையடையமுயன்றதுமிகவும்நன்றே
அறிஞர்கள்செய்வதான காரியம்இதுவேயாகும்
பரிவுடன்நானும்இப்போ பகருவேன்கேள்என்றனே.

---

ராகம்—செஞ்சுருட்டி. **(45)** ஆதிதாளம்

இசைந்தசூலமும் கரிஉரிபோர்வையும்—என்ற வர்ணமெட்டு.

சித்தநிரோதனம்செய்துநீர் பார்த்ததுமிகநன்றே
சித்தைஅதன்றியில்வேறென்றாலும் அடைவதும்மன்றே 1.

ஆனாலும்நான்ஒன்றுரைப்பேன் அன்புடன்கேழ்ப்பீரே
ஞானஸொரூபத்தைஅடையஇதுகாரணம்ஆகாதே 2.

தன்னையன்றியில்வேறோர்வஸ்து இல்லாததாலே
அன்யமாய்தோன்றுவதெல்லாம் ஆத்மாவாயாகாதாலே 3.

தானே ஆத்மாவாய் இருப்பதினால் அடைவதும் அன்றே
தானே அதுவென்றறிந்தோர்க்கடையாததும் அன்றே 4.

இருள் தன்னை காணும்முன் இரவிபோல்நின்றது ஆர்பாரும்
திரமுடனே நீர் ஆன்னிலையைஸந்ததம்ஒரும் 5.

உலகினில் பாமராள்பகிர்முகதிருஷ்டியினாலே
பலதுயர்அடைவார் பரம்தான்என்றறியாமலே 6.

காணாதவஸ்துவைகண்டேன்கண்டேன்நான்என்று
வீணாகத்தேடிக்காணாமல் இளைப்புற்றுநின்று 7.

சாஸ்திரம்கற்றதார்க்கிகர்களும் இவ்வாறே
வாஸ்தவமான தன்னிலையறியாமல்விழித்தாரே 8.

உடனுக்குடன் அவர்ஒவ்வொரு கிரந்தத்தைகிரகிப்பார்கள்
மடமைகொண்டுஅவாள் அனேகவிதம்மாகஉரைப்பார்கள் 9.

ஒருவேளை மூன்றுஸத்தைவாதத்தைஉரைப்பார்கள்
மற்றொருவேளை இரண்டுஸத்தேகஸத்வாதமும் உரைப்பார்கள் 10.

சிரவணத்தையன்றிநிதித்யாஸனம்அவர்கள்க்கில்லாதாலே
புருஷார்த்தம்இன்னதென்றறியாமல் விஸனத்தாலே 11.

சிரவணமனனங்களால்வஸ்துவை அறிவதும் அன்றே
திறமுடன் தானாயிருந்தால்அறியாததும்அன்றே 12.

தூரத்தில்சென்று பார்ப்போம்என்பதும்கூடாதே
நேராகபார்த்தோர்க்கிருந்தஇடத்தில்இருப்பதே 13.

விஜாரணைசெய்தறிவோம்என்பதும்ஆகாதே
விஜாரமற்ற இடத்தில்தானாய்இருப்பதே 14.

எப்படியென்றால் இப்போதுஉமக்கொருதிருஷ்டாந்தம்
செப்புவேன்கேட்டுநீர்தெளிந்திருப்பீர்உமதுசித்தம் 15.

தலையின்நிழலைதாவிஒருவன்மிதித்தாக்கால்
நிலையாகஅவ்விடத்தில் நிற்குமோநாம்பார்க்க 16.

கண்ணாடியில்தோன்றும் பிரதிபிம்பத்தைபாலன்அறிவான்
அன்னியில்அதின்அதிஷ்டானம்ஏதென்றுஅறிவானோ 17.
பிரதிபிம்பமானஇவ்வுலகைஜெனங்கள் அறிவார்கள்
பரபிர்ம்மமானபிம்பத்தைதானும்அறியார்கள். 18.

---

விருத்தம்.

ஷண்மதஸாரமெல்லாம் சாற்றியேஹேமலேகை
விண்ணதாய்இருக்கும்சுத்த விமலமாம்ஸொரூபம்தன்னை
திண்ணமாய்அடைந்துவேந்தன் சிரப்புடஇருக்கவென்று
பண்புடன்பாவையின்னும் பகர்ந்திடலுற்றாளே.

---

கிருஷ்ணன்செய்தாதிஷ்டதனத்தை—என்ற வர்ணமெட்டு.

நாதனேநீர்இன்னமும்நன்றாகவே ஆராய்ந்துபாரும்
ஞானஞேய மாயிருக்கும்இஜ்ஜெகத்து ரூபத்தை 1.
விரிவாகவேஜெகத்விஷயம் வினோதமாய்இருந்திட்டாலும்
அறிவுஒன்று அறிபடும்பொருள் ஒன்றாக இருப்பதினால் 2.
ப்ரபஞ்சவிஷயங்களெல்லாம் ப்ரத்தியக்ஷமாயிருப்பதினால்
ப்ரத்தேகமாய் அதைஎடுத்துசாற்றவும்வேண்டாமதினால் 3.
ப்ரமாதாவை அல்லாமல் ஓர்பிரமாணங்கள் இல்லாததாலே
ப்ரமாதாவை அல்லாமல் ஓர்பிர்ம்மம் என்பதும் இல்லை 4.
ப்ரமாணங்களுக்குஎல்லாம் ப்ரமாணமாய் இருப்பதினால்
ப்ரமேயத்தைஅறிவதற்குப்ரமாணங்கள்தேவையில்லை 5.
ஞாதுர்வானஜீவனேசித்ஸொரூபமாயிருப்பதினால்
ஸாதனத்தினாலவனை அறிவதென்பதாகாததினால் 6.
சூரியனைஅறிவதர்க்குதீபம்தேவைஇல்லாதுபோலே
சீரானசித் ஸொரூபம்காண ப்ரமாணமும் தேவையில்லை 7.
குதர்க்கசங்கைஉள்ளவர்க்குகேள்வியும்பதிலும்இல்லை
இதம்மாகதன் ஸொரூபத்தைஅறிவதொரு போதும்இல்லை 8.

காலபரிச்சேதமற்றவஸ்துவைதானுய்அறிந்து
மேலாம்பதத்தை, யடைந்து, மேன்மை, யாகவே, சிறந்து 9.
ஸுகவடிவாய்ஆத்மாவில், தோன்றும், பரிச்சேதமெல்லாம்
ககனம் தன்னில் தோன்றிடும் உலகமது போலவேயாம் 10.
அரசனேஇவ்வுலகங்கள்க்குஆதாரமாகஇருக்கும்
பரநிலையை சூக்ஷ்மபுத்தியால் ஆராய்ந்து பாருங்கள் 11.
திருச்யவிஷயங்களேயெல்லாம் விளக்கிவைக்குகின்ற
த்ருக்ஸொரூபம் தாமேஎன்று சிந்தைமகிழ்வீர்ஒன்ருய் 12.
ஹம்ஸோஹம்பாவனைசெய்து சோகமோகத்தைஒழித்து
ஏகமாக எங்கிலும் நீர் தன்மயமாகச் செழித்து 13.
மாசற்றபொருள்உமக்கு மன்னனேயுரைக்குகின்றேன்
நாசமற்ற நாதாந்த நிலையதினில் இருப்பதர்க்கு 14.
சித்ஸொரூபம்சுஷுப்திவேளையில்அன்ருே இருக்கின்றது
எத்திசையும் நிறைந்ததென்று ஏன்உரைத்தாய் என்பீரா
[கில் 15.
ஜாக்ரஸொப்பனங்களின் மத்தியில்சூக்ஷித்துபாரும்
வாக்மனோ அதீதமான வஸ்துவும் அதுவேயாகும். 16.

---

விருத்தம்.

அன்னிலேஅறியாதன்ருே அவனியிலுள்ளோரெல்லாம்
துன்பமாம்கடலிலாழ்ந்து தன்னிலேதனைமறந்தார்
சின்மயஸொரூபத்திர்க்கு உருவம்மென்பதுதானுண்டோ
அன்னும்இந்திரியத்திர்க்கே பூதத்தின்காரியமெல்லாம்.

---

ராகம்—அனந்தபைரவி. **(46)** ஆதிதாளம்.

கையைதாடா கோபிகரமணு—என்ற வர்ணமெட்டு.

இன்னமும்சொல்லுரேன் மன்னனேகேளும்மனம்மகிழ்ந்து
பின்னமில்லாத சின்மயநிலையுகந்து 1.

பிர்மம்பிரபஞ்சபொருளை விளக்கிக்கொண்டிருந்தபோதும்
நிர்மலமாம் கண்ணாடியின் தன்மைபோலாகும் 2.
சர்வசராசரபொருளிலும் சைதன்யம்வியாபித்திருக்க
சர்வேச்வரன்என்றதற்கோர்நாமம்ஏற்க 3.
நித்தியஸொரூபத்தை தானென்றறியநெடுநேரமாய்
சித்தநிரோதனம் செய்ததினாலேவஸ்துஆமா 4.
க்ஷணப்பொழுதுமனம் திருச்யவிஷயம்அற்றிருந்தால்
குணரகிதமான ஸ்வரூபமாகுமதால் 5.
நேசமுடனேநிரோதனத்தின் முடிவிலாத்மாவுக்கு
ஸாமான்யமாய்யாதொரு ஸத்ரூபமுண்டோ 6.
அவ்வடிவமே உம்முடஸ்வரூபம்என்றறிந்து
ஒவ்வஒண்ணாத ஆனந்தமாகசிறந்து 7.
சிரவணமனனநிதித்தியாஸனமில்லாதவர்க்கு
புருஷார்த்தம் ஒருபொழுதும்அடைவதன்று 8.
அடிக்கடிசிரவணமனனத்தால் சாஸ்த்திரத்தினர்த்தம்
துடியாகவேவெளியாவதுபோலேஆத்மா 9.
சிரவணமனனத்தாலேநன்றாய்அறியப்பட்டும்
நிரோதமானநிதித்தியாஸனமெதற்கு 10.
என்றிவ்விதம்சங்கை நீரும்செய்வீரானால்
நன்றாகவேநானும்பதில்லுரைப்பேன்னதால் 11.
விஷயங்களைநாடி இந்திரியங்கள்செல்வதினால்
விஷாதத்தைவிளைவிக்கும் மனமும்மதினால் 12.
நிதித்தியாஸனம்அன்றிஅதறிவதன்று
மதித்துமனதை உள்ளடக்கினால்நன்று 13.
பார்க்கிறேன்என்றவோர்எண்ணமும்இல்லாமல்ஒழிந்து
பார்வையற்றிருக்கும் அந்தகன்போல்சிறந்து 14.
காண்பானும்காக்ஷியுமற்றிருக்கும்நிலையை
தானாகுமென்னும் தாமஸமன்றிபாரும் 15

விருத்தம்.

இவ்விதம்பிரியைசொன்னமொழியைஎல்லாம் கேட்டுவேந்தன்
அவ்விதம்செய்துநானும் அன்னிலேஅடைவேனென்று
இவ்வுலகத்தோற்றமன்றி சித்தவிச்ராந்தியாகி
செவ்வையாய்நிர்விகல்ப்ப ஸமாதியில்பொருந்தினரே.

---

## (47)

மத்த கெஜம்போல்நடந்து—என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

மன்னனும்பரநிலேயில் மகிழ்வுடன்இருப்பதனைக்கண்டு
பெண்கொடியாள்ஹேமலேகை பேசாமல் அவர்அண்டை
[யில்நின்று
ஒருமுகூர்த்தம்ஆனபின்பு உணர்ந்தரசன் கண்திறந்துபார்க்க
அருகினில்இருக்குகின்ற ஆரணங்கேபுகண்டரசன்சிரக்க
பின்னும்அன்னிலேதன்னில் அமிர்ந்திருக்கவேண்டுமென்று
[மன்னன்
தன்னிருகண்களைமூடும்தருணம்தன்னில் ஹேமலேகை
[அவர்முன்
கனிபவழவாய்திறந்து காரிழையாள்காவலனிடம்விள்ள
இனிஉமக்கென்னஸந்தேகங்கள்ளிருக்கிறதிப்போகொள்ள
என்னகாரணத்திர்க்காக கண்களைநீர்மூடுகிறீர்மன்னு
அன்னதனைஎடுத்துஇப்போ உரைத்திடுவீர்எந்தனுக்குநன்னு
இந்தவிதம்உரைக்கவுமே மதுவுண்டுமயங்கினவன்போலே
சிந்தையில்ஆயாஸ்யத்துடன் செப்பிடுவான்மன்னனும்அப்
[பாலே
அன்பினில்சிறந்ததான ஆரணங்கேசொல்லுகிறேன்உனக்கு
அன்றுநான்அடையாபதம் இன்றுலபித்ததுஎந்தனுக்கு
துன்பத்தைவிளேத்திடும் உலகினில்ஒருஸுகமும் இல்லே
என்றைக்கும் அழியாபதம் இவ்வுலகில்திரிவோருக்குஇல்லே

சாற்றைகிரகித்தெரியும் சக்கைபோல்விஷயம்என்றறிந்தேன்
பேர்த்திடாபிர்ம்மஸுகத்தை இன்னாள்வரையறியாமலிருந்
[தேன்
தன்னிடத்திலேயிருக்கும்பொருள் தன்னை அறியாமல்ஒருவன்
இன்னிலமெங்கும்இரந்துஉண்பதுபோல் இருந்தேனேவீ
[ணாய்நான்
தன்னிடத்திலேயிருக்கும் சின்மயானந்தத்தையறியாமல்
துன்பமாம்விஷயத்தை ஸுகமென்றுஅலைந்தேனேதெரியா
[மல்
ஸுகவடிவம்மானஸொருப ஸமாதிஅறியாமல்ஜெனங்கள்
ஸுகமற்றவிஷயங்களை ஸுகம்என்றுஎண்ணிஅலைபுறுர்கள்
இத்தனைநாளாகநானும் கஷ்டப்பட்டுழைத்ததெல்லாம்போ
[ரும்
சித்தவிச்ராந்தியடைந்தாலே சிதானந்தரெஸமும்ஊரும்
[மேலே
அன்னிலைதன்னையறிந்து ஆனந்தமாகவேநான்னிருக்க
உன்னைஅஞ்சலிசெய்குறேன் என்னிடத்தில்நீயும்கிருபை
[வைக்க
அந்தநிலைஅறிந்திருந்தும் அதிஷ்டம்அற்றவர்போல்இருக்
[கின்ருய்
இந்தவிதம்சிந்தைமகிழாமல் துன்பத்திற்குமுயல்கின்ருய்.

---

விருத்தம்.

இம்மொழியைக்கேட்டுசற்றே ஹேலேகையும்மகிழ்ந்து
நிம்மதியுடனேபின்னும் நிரூபணைபார்த்துரைப்பாள்
செம்மையாய்நாதனேநீர் சித்வடிவறியவில்லை
வம்பதேஉரைப்பதெல்லாம் வஸ்துநீர்ஆகவில்லை

---

ராகம்—அடாணா. **(48)** ரூபக தாளம்.

எட்டாத கொம்பிலிருக்குமக்கனி—என்றவர்ணமெட்டு.

பல்லவி.

மன்னனேமிகவும்நன்றே என்னிடத்தில்நீர்
உரைத்தவகைஎல்லாம்

அநுபல்லவி.

சின்மயானந்தம்அடைந்தோர்க்கும்உமக்கும்
மண்ணுக்கும்விண்ணுக்கும் முள்ளதூரம்உண்டு (ம)

சரணங்கள்.

அறிந்துகொண்டேன்நான்என்று உரைப்பதுஅறியாதர்க்கு
நிகராகும்
பரிவுடன்உமதுகண்ணை திறந்தால் பரம்எவ்விதம் காணாமல்
போகும்
குறிகுணமற்றதோர்கூடஸ்தவஸ்துவில்கூடிஒன்றாக லயித்தால்
ஸுகமாகும் (ம)

ஸொப்ரகாசமாகஎப்பொருளிலும்வியாபித்திருக்கும்வஸ்து
வன்றோ
இப்போதுகண்ணை திறந்துவிட்டால்லதுகாணாதுஎன்பதும்
தப்பன்றோ
அப்படிகன்றேல்அகண்டபரிபூரணன்என்றபேருக்கானியுண்
டாமன்றோ (ம)

கண்களை திறந்துமூடுவதால்ஆத்மாகாணாமலேபோய்விடும்
மாகில்
விண்ணைப்போல்வியாபித்திருக்கும்விமலஸ்வரூபம்என்பதும்
உண்டோ
கெண்ணியமாகவே இனிமேலாகிலும்நீர்சின்மயமாக
செழித்திருப்பீரதில் (ம)

விருத்தம்.

அண்டபிர்ம்மாண்டம்மெல்லாம் அடங்கி ஒருஉருவமாக
விண்ணதாய்விளக்கும்சுத்த விமலமாம்ஸொரூபம்தன்னை
கண்களினிமையோ அந்த பிரம்மத்தைமறைக்குமிப்போ
பண்பதேமன்னனேநீர் என்னிடம்பகர்ந்ததென்ருள்

---

## (49)

காலையில்கண்ணண்எழுந்திருந்து—என்றவர்ணமெட்டு.

அரசனேநீர்இப்போஉரைத்ததெல்லாம் வெகு
ஆச்சரியமாகஇருப்பதினல்
திறமுடன்னின்னமும்பரநிலையை உரைப்பேன்
பரிவுடன்கேட்டுபிரமைஒழிப்பீர் இனி 1.

சிச்செடக்ரெந்தியினலேஅன்ரு நீரும்
அச்சம்மிகஇப்போதடைந்துவிட்டீர்
துச்சம்உலகம்என்றுதுருஸூடன்அறிந்து நீர்
ஸச்சிதானந்தத்தில் அமர்ந்திருப்பீர் ராஜே 2.

கிரெந்தியின்விபரத்தைஉரைத்திடுவேன் நீரும்
கிரகித்திடுவீர்சித்தம்சலியாமல்
பரத்தையறியாமல்பாரில்உழல்வதையே
மோகம்என்றவோர்கயர்என்பார் அதை 3.

அக்ஞானஸங்கேதகவிபரீதம்என்ற வெகு
அனேகமுடிச்சதில்உண்டென்பார்
முக்கியமாக அதைசேதித்தெறிந்துவிட்டால்
முக்திகையில்நெல்லிக்கனிஎன்பார் ராஜே 4.

அனுதிகாலங்கள்ஆகஇவையெல்லாம்
இனம்மாகஜீவனிடம்இருப்பதினல்
ஜெனனமரணம்என்னும்தீவினைக்குள்மடுத்து
அனவரதமும்அலைந்திடச்செய்யும் ராஜே 5.

இவ்விதம்சில்காலம்சென்றிடவே சித்தை
அறியவொட்டாமல்மாயைமறைத்திடவே
செவ்வையாய்தன்னிலையைதெரிந்திடாமல் ஜீவன்
சித்தின்பத்தைதேடிதிரிந்திடவே 6.

பெந்தத்தைவிட்டுவிலகினவனே ஸதா
ஆனந்தமாகஇருக்குகின்றான்
அந்தக்கரணவிர்த்திஅடக்கி அரசேபார்த்தால்
ஆத்மானந்தத்தில்அமர்ந்திருப்பீர் ராஜே 7.

கண்களைமூடிக்கொண்டிருக்கும்போது நீங்கள்
யாதொன்றைக்கண்டீர்களோ அதுவே
உண்மைஸொரூபம்மானசித்வடிவே அது
தன்மயமாகநிறைந்திருக்கும் ராஜே 8.

அதுவேஅகிலசராசரமென்னும் ஒரு
சித்திரத்திர்க்குஆதாரமாக
பொதுவாகவேபெரும்கண்ணாடிபோலவே
ஸர்வத்திலும்வியாபித்திருக்கும் ராஜே 9.

ஆதாரமன்றிஆரோபம்மில்லாதுபோலே
போதத்தைஅன்றியில்பிரபஞ்சம்இல்லை
வேதனைஎல்லாம்தீரவிரைவுடனே நீரும்
ஓதரெண்டற்றநிலையிலிருப்பீர் ராஜெ 10.

தேசகாலநாமரூபங்கள்எல்லாம்
ஜெடமாகவேஇருப்பதினால் ஸொப்ர
காசமானசைதன்னியமேஇவைக்கெல்லாம்
ஆதாரமென்றுஅறிந்துகொள்ளும் ராஜே 11.

அறிகிறேன்என்றஎண்ணம்இருக்கும் வரையில்
அன்னிலையைஅடைவதும்மன்று
அறியும்படிக்குமக்கேதாவதுதோன்றினாலும்
அதுவும்ஆத்மஸொரூபமன்று ராஜே 12.

காலாக்கினிக்கும்அதிக்ரமித்த ப்ரபை
யொடொத்ததன்ஸ்ரூஸம்வித்தானது
ஞாலமுழுவதையும்வியாபித்துகொண்டது
மேலாம்பதம்மெய்யன்பர்களிக்கும் ராஜே 13.

அப்படிக்கொத்தநிலையைஅடைந்த பின்பு
அறிவதும்உமக்கினிவேறேஉண்டோ
ஸொப்ரகாச சைதன்யமாய்ஆனபின்பு
செய்யும்ஸமாதிஇனிஒன்றுன்டோ ராஜே 14.

நான்னல்லஇவைகளெல்லாம்என்ற எண்ணமும்
ஒன்றும்தன்னிடத்தில்தோன்றாமல்
வான்போல்எங்கிலும்வியாபித்துகொண்டு நீர்
வஸ்துமயமாய்மகிழ்ந்திருபபீர் ராஜே 15.

பிரதிபிம்பம்மற்றகண்ணாடியைபோலே நீர்
பிரபஞ்சபிரமைகள்இல்லாமல்விட்டு
பிரத்தேகாபின்னஆத்மாபோதமேதானாகி
பேரின்பமாகமகிழ்ந்திருப்பீர் ராஜே 16.

எங்கெங்கும்அகண்டானந்தம்பொங்கிபொழிய
ஏகம்மாகிதானாய்நிறைய
மங்கும்திருச்யதோற்றங்களைஒழித்து நீர்
மாசற்றஸொரூபத்தில்லயித்திருப்பீர் ராஜே 17.

சித்தநிரோதனத்தில்தோன்றும்ஆனந்தம்போலே
என்னேரமும்தோன்றவில்லையே என்று
யுக்தியினலாசன்கேழ்க்கவேஅப்பொழுது
சித்தம்மகிழ்ந்துஉரைப்பாள்மாது அப்போ 18.

சித்தநிரோதனம்செய்யும்வேளையில் த்வைத
தோற்றங்கள்ஒன்றுமில்லாததாலே
சித்தத்தில்விசேஷமாய்ஸுகம்உதித்ததுபோலே
தோன்றும்ஆகயினலேஅப்போ ராஜே 19.

இவ்விதம்த்வைததோற்றங்களன்றியிலே நாம்
எவ்வேளைகளிலுமிருந்துவிட்டால்
ஒவ்வஒண்ணாதஆனந்தமாகியுள்ளம்
உண்மைபொருளதாய்நிறைந்திடுவீர் ராஜே 20.

ஸமாதியைவிட்டுவிலகிவிடும்போது துஷ்ட
காமாதிவாஸனை அதிக்ரமித்து
நேமமாய்மனதைவருத்தசெய்யாதோவென்று
மன்னனும்கேழ்க்கபதிலுரைப்பாள் 21.

பிம்பத்தைஅன்றிபிரதிபிம்பம்இல்லாதுபோலே
தன்னையன்றியில்வேறுய்ஒன்றுமில்லை
நிம்மதியாகவேஇருந்துவிட்டால் இனி
ஸுகதுக்கம்என்கிறபெந்தம்இல்லை 22.

திருச்யங்களானஇவ்வுலகங்கள்யாவையும்
திருக்கானதன்னிடத்தில்தோன்றும் என்று
கருத்தில்அறிந்துநீரும்கவலையாவும்ஒழித்து
அறிவுசொரூபமாய்நிறைந்திருப்பீர் ராஜே 23.

எங்கிலும்மாய்நிறைந்தசின்மயம்தான் என்று
சங்கைகள்ஒன்றும்இல்லாமல்லென்று
அங்கங்கேதோன்றுகின்றஅத்தனையும்தான் என்று
மங்களம்மாகமகிழ்ந்திருப்பீர் ராஜே 24.

சேத்தியம்நீக்கியசித்வடிவாய்இருந்து
சாற்றஒண்ணுசைதன்யமாய்நிறைந்து
ஆத்மாவேநாம்என்றுஅன்புடன்அறிந்து நீர்
அரசனேஇனிமேல்அமர்ந்திருப்பீர் ராஜே 25.

---

விருத்தம்.

இவ்வாருய்பிரியைசொல்ல இரைவனும்கேட்டுணர்ந்து
ஒவ்வஒண்ணுனந்தம்கொண்டு உள்ளம்பூரித்துகந்து
செவ்வையாய்நாட்டைஎல்லாம் சிறப்புடன்ஞண்டுகொண்டு
எவ்விதகுறைவும்அன்றி வேந்தனும்வாழ்ந்துவந்தான்

---

## (50)

ஆனந்தகளிப்பு—சாப்புதாளம்.

ஆனந்தம்மாகநிறைந்தார் ராஜன்
மானிலம்எங்கிலும்தான்என்றறிந்தார்
பிர்ம்மநிஷ்டர்களைச்சேர்ந்து ராஜன்
நிர்மலமான அர்த்தங்களை ஓர்த்து
கர்மபெந்தமெல்லாம்தீர்ந்து அப்போ
தர்மமாய்நாட்டை ஆண்டான்ராஜன்தேர்ந்து 1.

அச்வமேதயாகம்முதலாய் யாரும்
மெச்சும்படிக்கிவேந்தன்செய்தான்பலதாய்
மிச்சம்ஸொரூபம்அன்றிஇலதாய் ராஜன்
நிச்சயமாகஅறிந்தார்அதுவாய் 2.

இருபதிணுயிரம்வருஷம் ராஜன்
பொறுமையாய்ராஜ்ஜியத்தை ஆண்டவர்வந்தார்
அருமையாய்தத்வார்த்தம்எல்லாம் ராஜன்
கருத்தில்அறிந்துகளிப்புடன்சிறந்தார் 3.

இந்தவிதம்வேந்தன் இருந்தார் அப்போ
தந்தையாம்முக்தாரூடனும் அறிந்தார்
சிந்தையில்பிரமைபும்மடைந்தார் அதை
மைந்தனும்மணிரூடனிடத்தில்உரைத்தார் 4.

இன்பதுன்பங்களைக்கண்டும் அவன்
ஒன்றுபோல்பாவனைகொண்டிருக்கின்றுன்
என்னகாரணத்தினுலோ அவன்
உன்மத்தம்கொண்டவர்போல்விழிக்கின்றுன் 5.

துஷ்டரிஷ்டர்என்றும்பாரான் அவன்
நஷ்டலாபமென்னும்ஒன்றும்ஓரான்
நிஷ்டையைவிட்டவன்பேரான் ஸதா
மட்டற்றஆனந்தம்மாகஇருக்கின்றுன் 6.

மத்தியபானம்செய்தோர்போலும் அவன்
சித்தத்தில்சிந்தனையுள்ளவர்போலும்
நித்திரைவிட்டெழுந்தவர்போலும் முற்றும்
இத்தரையில்ஆசைஅற்றவர்போலும் 7.

இவ்விதம்சிந்தனைசெய்தார் ராஜன்
செவ்வையாய்ஒன்றும்புரியாதிருந்தார்
எவ்விதம்அறிவதுஎன்றார் ராஜன்
அவ்வேளைஹேமசூடனிடம்சென்றார் 8.

அன்புடன்மைந்தனைக்கண்டார் அவர்
தன்னுடஸந்தேகம்யாவையும் விண்டார்
இன்பமாய்அவரும்உள்க்கொண்டார் பின்பு
தன்னுடஅனுபவமெல்லாம்உரைத்தார் 9.

அத்தனையும்அவர்கேட்டார் உடன்
தத்துவசோதனைசெய்யத்தலைபட்டார்
கித்துபிரமைஎல்லாம்விட்டார் ஜீவன்
முக்தர்களாகிமோகம்எல்லாம்சுட்டார் 10.

மந்திரிமுதலானபேரும் அந்த
மன்னனிடம்கேட்டறிந்தோர்பலரும்
இந்தரஜாலமேஇப்பாரும் என்று
சிந்தையில்ஆனந்தம்கொண்டாள்எல்லோரும் 11.

அவ்வூரிலுள்ளஜெனங்கள்
அனைவரும்இவ்விதமேஇருந்தார்கள்
எவ்வீடுகளில்சென்றாலும் அவாள்
அவ்விதமேதத்வசோதனைசெய்வாள் 12.

காமக்ரோதாதிகளற்ரூர் . அவாள்
நேமமாய்நித்தியானந்தநிலைபெற்றூர்
பாமராள்ஸங்கங்களற்றூர்
எமநேமாஸனவிதிகளைகற்றூர் 13.

சென்றகாலங்களை ஓரார் அவர்
பின்வரும்காலத்தேயும்எதிர்பாரார்
தன்னிலையைவிட்டுபேரார் அவாள்
நிகழ்காலவிஷயத்தில்வியப்புற்றிருப்பார் 14.

இப்படிஎல்லோரும்இருந்தார் அங்கே
அப்போதுஸனகாதியோகிகள்வந்தார்
ஒப்பற்றமகிமையைக்கண்டார் அவாள்
செப்பவொண்ணுதஆனந்தமும்கொண்டார் 15.

பறவைகள்முதலாகஅங்கே நன்ருய்
பரதத்துவத்தையே பகுந்துஉரைக்கும்
ப்ரபஞ்சபிரமையற்று தன்னை
பரிவுடன்பார்த்தால்பிரம்மமாகும்என்கும் 16.

சித்ரூபமான ஆத்மாவை நன்ருய்
சேத்தியம்நீக்கிபார்த்தீர்களேயானல்
சித்தலால்சேத்தியமும்இல்லை என்று
சித்தபிரமைகள்சிதறிடும்என்கும் 17.

இந்தஉரை தன்னைகேட்டு அந்த
ஸனகாதியோகிகள் ஆச்சர்யபட்டு
அந்தநகரத்திர்க்கழகாய் அப்போ
வித்தியாநகரம்என்றுநாமம்பிட்டு 18.

ஸாதுஸங்கத்தின்மகிமை ராம
ஸந்தேகம்மரஎடுத்துஉரைத்தேன்
ஏதும்குறையற்று நீயும் இனி
ஏகாந்தஸொரூபமதாக நிறைவாய் 19.

இந்த்மொழி எல்லாம்கேட்டு அப்போ
ஜெமதக்னிமைந்தனும் ஸந்தேகம்விட்டு
சிந்தையில் பிரமையெல்லாம் சுட்டு அவர்
ஸந்ததமும் ஸதானந்தத்துள்பட்டு 20.

இந்த சரிதையை நித்தியம் யாபேரும்
சிந்தைமகிழ்ந்து படித்தாரேயாகில்
வெந்தவினை எல்லாம் தீர்ந்து அவாள்
ஸொந்தமாம்ஸொருபநிலையை அடைவாள் 21.

---

## (51)

மங்களம் சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

திருபுரஸுந்தரிக்கி ஜெயமங்களம் தினம்
ஸ்ரீ தரன்ஸோதரிக்கி சுபமங்களம்

அனுபல்லவி.

த்ருபவனவாஸிக்கு தீனதயாபரிக்கி
சின்மயஸொரூபிக்கி ஏகரஸானந்திக்கி (தி)

சரணங்கள்.

மன்னன் முக்தாசூடனுக்கும் மைந்தன்மணிசூடனுக்கும்
தன்னிலையறிந்தஹேமசூடன் ஹேமலேகைக்கும்
என்னுக்குள்ளே இருந்து இயம்பும்படி செய்தோர்க்கும்
சின்மயானந்தமான ஸ்ரீகுருநாதருக்கும் (தி)

சித்தம்மகிழ்ந்துரைத்த தெத்தாத்ரேயமுனிக்கும்
சிரத்தையுடனேகேட்ட ஜெமதக்னிமைந்தருக்கும்
பக்திசிரத்தையுடனே படிப்போர்க்கும்கேள்ப்போர்கள்க்கும்
சித்தம்உகந்து தினம் சிரவணம் செய்வோர்கள்க்கும் (தி)

நித்தியநிர்மலர்க்கும் அத்வைதபோதருக்கும்
ஸத்தியஞானானந்தமாகநிறைந்தவர்க்கும்
பத்மாஸனியாள் திருபாதாரவிந்தத்திர்க்கும்
சித்தமலரில்தினம் நிர்த்தனம்செய்வோருக்கும் (தி)

---

விருத்தம்.

திருபுரையின் கிருபையினாலும் ஸ்ரீகுருஉரையினாலும்
அரியதோர் சரிதைதன்னை அறைந்தேன் இவ்அவனிதனில்
பொறுமையாய் பெரியோர் எல்லாம்பிழையதுதிருத்திஎன்னை
கிருபையுடன் கார்ப்பாரென்று திருவடிபோற்றினேனே 1.

புத்திசற்றுமே இல்லாமல் பேதமைகொண்டுமிக்க
சித்தம்நொந்திருக்கும்போது சின்மயவடிவேபாரில்
பத்மாஸனியாகவந்து பரிதாபம்யாவும்தீர்த்த
சித்தடிக்கமலம் தன்னில் நித்யமும் போற்றி போற்றி

வாழி.

வாழிஸ்ரீதிருபுரைவாழி வாழிகுருபாதம்வாழி
வாழிஇக்கதைபடிப்போர் கேழ்ப்போர்கள்யாரும்வாழி
வாழிஸாதுக்கள்வாழி தாரணியுள்ளோர்வாழி
வாழிபத்மாஸனியாள் பாதத்தில்பணிவோர்வாழி.

(முற்றிற்று)

திருபுராரகஸ்யம் ஞனகாண்டத்திலுள்ள ஹேமச்(
பாக்கியானம் என்னும் ஸத்ஸங்க மாகாத்மியம் முற்
றது.

ஓம்தத்ஸத்

ஸர்குருவேதுணை.